Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 24 ஆம் நாள் (10.10.2002) வியாழக்கிழமை இதழ் : 10

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கல்
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும் பல் கட்டுதல். மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷறி பல் கட்டுமிடம்
(சி/036)
232/A, கண்டி வீதி, சாவகச்சேரி.

### அம்பாறை காஞ்சிரங்குடாவில் நேற்றிரவு பயங்கரம்

# எஸ்.ரி.எவ். கண்மூடித்தனமாகச் சுட்டதில் ஏழுக்கும் அதிகமான மக்கள் கோரப்பலி!

## 15இற்கும் அதிகமானோர் படுகாயம்; சடலங்கள் மீட்கப்படாத நிலையில்!

(நமது விசேட நிருபர்)

**அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் (எஸ்.ரி.எவ்.) நேற்று மாலை ஆறு மணியளவில் பொதுமக்களின் கண்டன ஊர்வலம் மீது தாக்குதல் நடத்தியதில் ஏழுக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பன்னிரண்டுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களுள் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனக் கல்முனை ஆதார வைத்தியசாலையிலிருந்து நமது ஈழநாட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது.**

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகள் எங்கும் பதற்றம் நிலவுகிறது. கல்முனை மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் போக்குவரத்து மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பித்த நிலையே நேற்று நள்ளிரவு வரை நிலவியது. இவ்விடயம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

### புலிகளைத் தாக்கிய படையினர்

அம்பாறை காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாம் அமைந்துள்ள இடத்தினூடாக வழமைபோல உழவு இயந்திரமொன்றில் காலை பத்து மணியளவில் அம்பாறையிலுள்ள உடும்பங்குளம் கோட்ட அரசியல் பொறுப்பாளர் விசுவநாதன் (வயது35), கோமாரி பிரதேச பொருண்மிய மேம்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் கிறிஸ்ரிராஜ் (வயது20) ஆகியோர் பயணம் செய்து கொண்டிருந்தனர். உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்றவர் ஒரு பொது மகனாவார்.

திடீரென உழவு இயந்திரத்தை தங்களது முகாமுக்கு அருகில் வழி மறித்த அதிரடிப் படையினர், மண்வெட்டிப் பிடியொன்றினால் வாகனச் சாரதியையும், போராளி கிறிஸ்ரிராஜ்யையும் தாக்கத் தொடங்கினர்.

அவ்வேளையில் வாகனத்திலிருந்து இறங்கிய போராளி விசுவநாதன் தாங்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் என்றும் தயவுசெய்து தாக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

புலிகள் என்று தெரிந்து கொண்டுதான் (10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணானம் விநாசியர்



பிரதமர் பேசித் தீர்க்கப் பார்க்கிறார். அதிரடிப்படை சுட்டுத் தீர்க்கலாம் எண்டு யோசிக்குதோ...?

## சர்வதேச மாணவர் பேரவை திருநெல்வேலியில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் யாழ். அலுவலகம் நேற்று 11 மணியளவில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார். மாணவர் பேரவையின் பெயர்ப்பலகையை மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மாணவர் பேரவையின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி மங்கள விளக்கை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். பின்னர் தமிழீழத்



தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைக்க, மாணவர் பேர (10ஆம் பக்கம் பார்க்க)

## அறிவுசார்ந்த துறையில் உலகுடன் இணைய உதவும்

### மாணவர் பேரவைக்கு தமிழ்ச்செல்வன் வாழ்த்து

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் திறப்பு விழாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விசேட செய்தியொன்றை விடுத்துள்ளார். அச்செய்தியில் அறிவுசார் துறையில் உலகுடன் இணைவதற்கு இப்பேரவை உதவும் என அவர் தெரிவித்தார்.

அவரது இச்செய்தி பேரவைத் திறப்பு விழாவில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியினால் வாசிக்கப்பட்டது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(9ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் மிலிந்தவின் உறுதிமொழியை அடுத்து

## களுத்துறை தமிழ்க் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்!

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி வந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தினைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை மன்னார் மாவட்ட கத்தோலிக்க ஆயர் இராயப்பு யோசபம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் களுத்துறை சிறைச்சாலைக்கு விஜயம் செய்தனர்.

மிகவிரைவில் - அதாவது ஒரு மாதத்துக்குள் நான் மீண்டும் உங்களைச் சந்திப்பேன் என்றும், அப்போது தற்போதய நிலைமையைவிட மிகவும் முன்னேற்றகரமான முடிவுகளுடன் உங்களைச் சந்திப்பேன் என்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கு தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கைதிகள் தமது உண்ணாவிரதத்தை தற்காலிகமாக கைவிட்டனர். மன்னார் ஆயர் கைதிகளுக்கு பால் வழங்கி போராட்டத்தை நிறைவுசெய்து வைத்தார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் பணிப்பின்பேரில் இக் குழுவினருடன் சிறைச்சாலைக்குச் சென்ற (10ஆம் பக்கம் பார்க்க)

### தனியார் பஸ் உரிமையாளர் தாக்கியதில்

## யாழ். பஸ் நிலையத்தில் களேபரம் பஸ் - ஓட்டோ சாரதிகள் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துக் சபையினருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்குமிடையே நீண்டகாலமாக இருந்து வந்த கருத்து முரண்பாடு நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பஸ் நிலையத்தில் கைகலப்பாக மாறியது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் பணிபுரியும் பஸ் சாரதி ஒருவரை பஸ் நிலையத்தில் வைத்து தனியார் பஸ் உரிமையாளர் தாக்கியதுடன், அவரிடம் இருந்த பணத் (10ஆம் பக்கம் பார்க்க)



## கைதிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் குடாநாடு ஒரு மணிநேரம் ஸ்தம்பித்தது!

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரியும் அவர்களின் உண்ணாவிரப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று யாழ். குடாநாடு தழுவியரீதியில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

யாழ்.குடாநாட்டில் செயற்படும் 51 மனிதநேய அமைப்புக்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது.

இப்போராட்டம் காரணமாக குடாநாட்டில் நேற்று நண்பகல் ஒரு மணி நேரம் அனைத்துத் துறைப்பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்தன. அரச துறை அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் ஆகியவை நேற்று நண்பகல் பன்னிரண்டு மணி முதல் 1 மணிவரை பூட்டப்பட்டிருந்தன. ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரும் வீதிக்கு வந்து மறியல் போராட்டம் செய்தனர். இதனால் வீதிப்போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதமடைந்தன. யாழ்.நகரப் பகுதியில் உள்ள பிரதான வீதிகள் பலவற்றின் (10ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள்

இன்று தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முக்கிய நிகழ்வுகள் இன்று மாலை 3 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன.

# மாறிவரும் போராட்ட வடிவில் பெண்கள் அபிவிருத்தி முக்கியம்

## தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையொட்டி மகளிர் பிரிவு அறிக்கை

இன்று போர் ஓய்ந்து சமாதான முன்னெடுப்புகள் களைகட்டத் தொடங்கியுள்ளது. தேச அபிவிருத்தி என்று போராட்ட வடிவம் புதுப்பரிமாணத்தை நோக்கி நகர்கிறது. இதில் பெண்களின் அபிவிருத்தி மிகவும் பிரதான இடம்வகிக்கின்றது. இவ்வாறு இரண்டாம் லெப்.மாலதியின் நினைவு நாளையும், தமிழீழப் பெண்களின் எழுச்சி நாளையும் முன்னிட்டு அரசியல்துறை மகளிர் பிரிவு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மேலும்,

தமிழ்த் தேசிய இனத்தின் அரைவாசித் தொகையினரான தமிழீழப் பெண்கள் சமூக ஒடுக்குமுறைத் தனங்களிலிருந்தும் பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்தும் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும், இனத்தின் தேசியத்தையும் தன் இன மக்களின் அரசியல் அபிலாசையையும் மீட்டெடுத்துப் பாதுகாக்கும் பொருட்டும் போராட்டத்தில் குதித்துவிட்டார்கள் என்ற தேசிய எழுச்சியைப் பிரகடனப்படுத்தும் நாளாகவே 2ஆம் லெப். மாலதி முதல் பெண் மாவீரராக ஈகம் புரிந்த நாள் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகத் தோற்றம் பெற்றது.

விதிக்கப்பட்ட வாழ்விலிருந்து மீண்டெழுந்து தன்னைத் தானே தீர்மானிக்கும் உன்னத வாழ்வை நோக்கிய பயணத்தை ஆரம்பித்திருக்கும் தமிழீழப் பெண்களின் வல்லமை தேச விடுதலை எனும் தேசியக் கடமையை சரிவரப் பகிர்ந்து கொண்டிருக்கிறது. மிகவும் நெருக்கடியான போர் மேகம் சூழ்ந்த நாட்களில் தமிழீழப் பெண்கள் வாழ்ந்த வாழ்க்கையும் பெற்றுக்கொண்ட வடுக்களும் புரிந்த போராட்டங்களும் மிகவும் கொடுமையானதும் மிக்க உன்னதம் வாய்ந்ததும் ஆகும். இதில் போராளிப் பெண், சாதாரண சமூகப்பெண் என்ற பாகுபாடு தேவை இல்லாமல் அனைவருமே இனவாதப்போரை எதிர்கொள்பவர்களாகவும் அதற்கெதிராகப் போராட வேண்டியவர்களாகவுமே இருந்தார்கள். அந்த அவலத்தின் புதைகுழியிலிருந்துதான் தமிழீழப் பெண்களின் எழுச்சியின் வேர் இறங்கத் தொடங்கியது.

உரிமை என்பது ஒவ்வொரு உயிரின் பிறப்போடும் சேர்ந்தே பிறப்பது. அதை எடுக்கவோ கொடுக்கவோ இன்னொருவருக்கு உரிமையில்லை. தமிழ்த் தேசிய இனம் எவ்வாறு தனது உரிமைகளை நிலைநாட்டத் தானே போராடுகிறதோ சர்வதேசத்தின் முன்னிலையில் தன் உரிமைக் குரலைக் கம்பீரத்தோடு முன்வைக்கிறதோ அதுபோலவே தமிழீழப் பெண்களின் உரிமையும் அவர்களின் பிறப்புரிமை. அவளே அதன் குரலாக ஒலிக்க வேண்டியவள். அதனால் தான் இந்த எழுச்சி தினத்தில் அவளின் உரிமைக்குரல் சர்வதேசத்தின் செவிகளிலும் எழுச்சியுடன் ஒலிக்கிறது.

ஒரு இனத்தின் மீதான அழிப்பின் போது ஆக்கிரமிப்பாளர்களின் கைகள் முதலில் நீள்வது பெண்களை நோக்கியே ஆகும். நேரடியானதாகவும், மறைமுகமானதாகவும் பல்வேறு வடிவங்களில் அதன் பரிமாணங்கள் அமைகின்றன. நேரடியான உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள், கைதுகள், பாலியல் வன்முறைகள் என்பனவும் மறைமுகமான குடும்பப் பாதிப்புக்கள், சமூகச் சீரழிவுகள் என பனவும் தனித்தனியே விரிவாக்கம் காணும்போது அதன் முழு வடிவமும் ஒரு இனப்படுகொலை வடிவத்தையே தரும். எனவேதான் ஒரு இனத்தின் விடுதலை என்பது பெண் விடுதலை அடையும்போதுதான் முழுமையடைய முடியும் என்பதைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

தமிழீழப் பெண்கள் கல்வி, பொருளாதார, சமூக முன்னேற்றப் பணிகளில் ஒய்வொழிச்சல் இல்லாமல் உழைக்கத் தயாராகி விட்டார்கள். ஆனாலும் அவர்களுக்கான தடைகள் சில இன்னும் தளராமலே உள்ளன.

சமூக அபிவிருத்திக்காகப் பெண் உழைக்கும்போது வீட்டிலிருக்கும் ஒவ்வொரு பெண்ணும் வீதிக்கு வருகிறாள். அந்த ஆற்றலின் வடிவத்தை மதிப்பளித்து வரவேற்கச் சமூகம் தயாராக வேண்டும். இங்கேதான் புதிய சிக்கல்கள் முடிச்சவிழ்கின்றன. இன்னும் பெண்ணை வெறும் பாலியல் பண்டமாகக் கருதும் கருத்துருவாக்கலின் ஆதிக்கம் அவளுக்கான பெருந் தடையாக உள்ளது. இது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே கோர வடிவம் கொண்டுள்ளது. காரணம் அங்கு நிலவும் பொழுதுபோக்குச் சாதனங்களின் பெண் தொடர்பான வெளிப்பாடுகளும் போதைமருந்து பாவிப்புகளும் இடம்பெயர் வாழ்வும் வெறும் கனவு வாழ்க்கைக்குள் இளைய தலைமுறையினை மூழ்கடிக்கும் தந்திரோபாயங்களுமேயாகும். இதிலிருந்து அந்த மக்கள் மீளும்போதுதான் அங்கு வாழும் பெண்களின் அபிவிருத்திகது தடையற்ற வழிபிறக்கும். இத்தகைய மீட்சிக்கு வடக்கு, கிழக்கில் நிலை கொள்ள வைக்கப்பட்டிருக்கும் இராணுவப் பிரசன்னம் அகற்றப்படவேண்டியது அவசியமானது. இன்றியமையாதது.

எனவேதான் இந்தப் புரட்சி நாளில் தமிழீழப் பெண்களின் ஒட்டுமொத்தக் குரலாக எங்களின் உள்ளக்கிடக்கைகளை சர்வதேசத்தின்முன் வெளிப்படுத்துகின்றோம். தமிழீழப் பெண்களின் சமூகவிருத்திக்கு காலம் கனிந்துள்ள இந்தச் சமாதானச் சூழலில் அதற்குத் தடையாக இருக்கும் காரணியான சிறிலங்காப் படைகள் முழுவதும் விலகவேண்டும். அனைத்து மக்களும் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர வேண்டும். இந்த இரு தடைகளும் நீங்கவேண்டும் என்பதே தேச விடுதலையின் முக்கிய அம்சமான அபிவிருத்திப் பாதையில் முன்னேறத் துடிக்கும் தமிழீழப் பெண்களின் இன்றைய தேவையாகும். அதுவே எங்களின் செய்தியுமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறு விளம்பரம்

**வித்தும் விழுதும்**

***தமிழினம் அன்றுமுதல் இன்று வரை***

தமிழினத்தின் பண்டைப் பெருமையும் இந்நாட் சிறுமையும் ஆராய்வது. இனத்தின் மேம்பாட்டில் நாட்டமுள்ளோரைச் சிந்திக்கத் தூண்டுவது. **ம.கங்காதரம்** எழுதியது. மண்டேலா புத்தகசாலையில் கிடைக்கும். (006)

## THAMPI Links with LIONAIR

உங்களின் சௌகரியமான பயணத்திற்குப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட

BRITISH AEROSPACE HS 748 Aircraft............ SAFETY & COMFORT.........

ROLLS ROYCE ENGINES............

50 நிமிடங்களில் கொழும்பு WARM HOSPITALITY..........

**யாழ். கொழும்பு யாழ். ரூபா 6,950/=**
**ஒரு வழிக்கட்டணமாக ரூபா 4,000/= மட்டுமே!!**

Stand by Tickets Available for Rs. 1,999/=

அருகில் உள்ள தொலைத்தொடர்பு நிலையங்களினூடாக உங்கள் பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY

மேலதிக விபரங்களுக்கு:

**தம்பி தொலைத்தொடர்பு நிலையம்,**
கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-2222040, 2222504, 2222823.
HOTLINE: 072-401423, 0777-382343.

(009)

## பாலைவனமாகி வரும் எங்கள் தேசத்தை

## மீண்டும் சோலைவனமாக்குவோம்!

கற்பகச் சோலை
பனை நடுகைத் திட்டம்

எங்கள் தாயகத்தின் தடைகள் தளரும் இன்றைய தருணமறிந்து அன்று காலம் தந்த தோழனாகத் திகழ்ந்த உங்கள் கற்பகச்சோலை மீண்டும் உங்கள் முன் தளராது தடம் பதிக்கின்றது. காலத்திற்குக் காலம் இடப்பெயர்வே வாழ்வாகிப்போன நாங்கள், எங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம். அழிந்து போய்க்கொண்டிருக்கும் எங்கள் இயற்கைச் செல்வங்களில் ஒன்றான பனை மரங்களுக்கு இணையாக பலமடங்கு பனம்விதைகளை மீள்நடுகை செய்து பாலை வனமாகிவரும். எங்கள் தேசத்தை மீண்டும் சோலைவனமாக்குவோம். காலத்தின் தேவையறிந்து மீண்டும் உங்கள் காப்பரணாகத் திகழவிருக்கும் கற்பகச்சோலையோடு இணைந்து பனம் நடுகை வேலைத்திட்டத்தை முன்னெடுத்திட எல்லோரும் வாரீர். எங்கெல்லாம் பனம் விதை நாட்டமுடியுமோ அங்கெல்லாம் நாட்டி எங்கள் தேசம் மீண்டும் வளங்கொழிக்க வழிசமைப்போம்.

~ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

(008)

# வடபகுதியில் உள்ள வீதிகள், பாலங்களை புனரமைக்க ரூ.54,070 மில்லியன் தேவை!

## முல்லை வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளர் தகவல்

(கிளிநொச்சி நிருபர்)

வடபகுதியில் உள்ள 12,790 கிலோமீற்றர் நீளமான வீதிகளைப் புனரமைக்க வேண்டியிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் வே.சிவனடியார் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் உள்ள பெரும்பாலான பிரதான சாலைகள், வீதிகள் அனைத்தும் தார் போடப்பட வேண்டிய நிலையில் உள்ளன. பாலங்கள், மதகுகள், அனைத்தும் மீளக் கட்டியமைக்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன.

மிக மோசமாகச் சேதமடைந்துள்ள இந்த வீதிகள் பதினைந்து வருடங்களுக்கு மேலாகச் சீர்செய்யப்படாதுள்ளன.

வடபகுதியில் A, B தரங்களில் 1,260 கிலோமீற்றர் நீளமான பிரதான சாலைகளும், அவற்றில் உள்ள 58 பாலங்களும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையிலும் மீளக் கட்டியமைக்கப்பட வேண்டிய நிலையிலும் இருக்கின்றன.

இதேவேளை C, D தரங்களிலான 2830 கிலோமீற்றர் நீளமான வீதிகளும் அவற்றில் உள்ள 20 பாலங்களும் மீளக்கட்டியமைக்கப் படவும், புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையிலும் இருக்கின்றன.

இவற்றைவிட வடபகுதியில் உள்ள 8,700 கிலோமீற்றர் நீளமான வீதிகளும் 120 மதகுகள் மற்றும் பாலங்களும் மீள கட்டியமைக்கப்பட வேண்டியிருக்கின்றன.

இவற்றைக் கட்டியமைப்பதற்கு 54,070 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என்றும் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றும் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

## உசனில் படையினர் எடுத்துச்சென்ற மின்பிறப்பாக்கி பழுதான நிலையில் ஒப்படைப்பு

(கொடிகாமம்)

உசனில் இருந்து படையினரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி பழுதடைந்த நிலையில் மின்சார சபையிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிருசுவில், உசன் பகுதிகளுக்கு மின் வழங்குவதற்காக மின்சாரசபை இந்த மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தி வந்திருந்தது. தென்மராட்சியில் மோதல்கள் ஏற்பட்டபோது படையினர் இந்த மின்பிறப்பாக்கியை எடுத்துச்சென்றிருந்தனர்.

இப்பகுதிக்கான மின் விநியோகத்தை மேற்கொள்ள முடியாதிருந்ததனால் மின்பிறப்பாக்கியைப் படையினர் மீள ஒப்படைக்க வேண்டும் என மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தற்போது படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த மின்பிறப்பாக்கி பழுதடைந்த நிலையில் இருப்பதால் கொழும்புக்குக் கொணடு சென்றே திருத்தியமைக்க வேண்டியிருக்கும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உசனில் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி தொடர்பான செய்தி ஒன்று நமது ஈழநாட்டில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (36)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் முதலிடம்

(ஆனைக்கோட்டை)

சமூக சேவைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கு இடையிலான தெரிவுப் போட்டியில் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. முதலாம் இடத்துக்கான கேடயம் திருகோணமலை நகர மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. (46)

## அரச அலுவலர்களுக்கு கணினிப் பயிற்சி

(வலி.கிழக்கு)

வடக்குக்கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தால் அரச அலுவலர்களுக்கான கணினிப் பயிற்சிகள் அலுவலகங்கள் அண்மையில் உள்ள கணினிப் பயிற்சி நிலையங்களில் நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சி வகுப்புக்கள் மிகவிரைவில் ஆரம்பமாக வுள்ளன. (79)

## இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட முட்கம்பி வேலியை உடனடியாக அகற்றுக!

### கற்கோவளம் பகுதி மக்கள் வேண்டுகோள்

(வடமராட்சி)

இராணுவத்தினரால் கைவிடப்பட்ட பல்லப்பை முதல் மூர்க்கம் வரையான பகுதிகளில் உள்ள மண் அணைகளுக்கிடையில் மீண்டும் புதிதாக அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிகளை அகற்றுமாறு கற்கோவளப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் பாதுகாப்பு மண் அணைகளை அமைத்திருந்த படையினர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியை விட்டு வெளியேறியிருந்தனர்.

கடந்த 26ஆம் திகதி மீள அமைக்கப்பட்டுள்ள முள்வேலியினால் தமது மரங்களை பராமரிக்க முடியாமலும்- புதிய மரங்களை நாட்ட முடியாமலும் இருப்பதாகவும், புதிய வேலிகளையும், மண் அணைகளையும் அகற்றும்படியும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இராணுவம் வெளியேறிய பின்னர், கடந்த இரு வருடங்களாக புதிய மரக்கன்றுகள் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (23)

## விசேட சொற்பொழிவு

(சுதுமலை)

யா/இராமநாதன் மகளிர் கல்லூரியில் நவராத்திரி விழாவை முன்னிட்டு இரா.கேதீசனால் பெரிய புராண தொடர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. மேற்படி கல்லூரி மாணவர்களுக்கு பெரியபுராண விடயப்பரப்பில் விசேட போட்டி நடைபெறவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

(91)

## விண்ணப்பம் கோரல்

*யாழ்.பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகு முன்பள்ளி ஆசிரியருக்கான ஆங்கிலக் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.*

*இக்கற்கைநெறிகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதற்குமுன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (88)*

## பலாங்கொடை மண்சரிவின் விபரீதம்; மாயமாய் மறைந்தது ஆறு!

### காணாமற்போன பெண்ணின் சடலம் 8 கி.மீ. தொலைவில் மீட்பு

*(கொழும்பு நிருபர்)*

பதுளை கொழும்பு வீதியில் பலாங்கொடவில் கடந்த சனியன்று இடம்பெற்ற மண்சரிவின்போது உயிரிழந்த நால்வரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

சனியன்று நடந்த மண்சரிவின் போது வீடொன்றில் இருந்து ஏழு பேர் காணாமல் போயிருந்தனர். இவர்களில் நால்வரின் சடலங்களை பொலிசார் மீட்டுள்ளனர்.

பெண் ஒருவரின் சடலம் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து எட்டு கி.மீ. தொலைவிலும் மூன்று மாதக் குழந்தை ஒன்றின் சடலம் மூன்று கி.மீ. தொலைவிலும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, இப்பகுதியில் ஓடிக் கொண்டிருந்த ஆறு ஒன்று முற்றாகவே மண் மூடியதால் காணாமற் போயுள்ளது. இலங்கையில் இடம் பெற்ற மண்சரிவுகளில் இதுவே மிகப் பெரியதென புவியியல் துறைசார் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இச்சம்பவத்தில் சுமார் 3கி.மீ. பரபபளவுடைய நிலப்பகுதி புதையுண்டதாலும் இத்தகைய சம்பவங்கள் மலையகத்தில் தொடர்ந்து இடம்பெறலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கடற்படைத் தளபதியின் தொலைபேசிப் பாவனை

## பன்னிரண்டு நாட்களில் ஒரு லட்சம் ரூபா!

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் கைத் தொலைபேசிக் கட்டணம் குறிப்பிட்ட பன்னிரண்டு நாட்கள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு மட்டும் ஒரு லட்சம் ரூபாவாக அமைந்தமை ஏனைய அதிகாரிகள் மத்தியில் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இந்த அதிகரிப்பு, அவர் வெளிநாடு ஒன்றுக்குப் பாதுகாப்பு கருத்தரங்குத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஓகஸ்ட் மாதம் சென்றிருந்த வேளையில் ஏற்பட்டதாகும்.

தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்புத்துறை சார்ந்த சிரேஷ்ட அதிகாரிகளுக்கான இக்கருத்தரங்குத் தொடரில் கலந்துகொள்வதற்காக அவர் பொஸ்ரன் நகரிலுள்ள ஹவார்ட் பல்கலைக்கழகத்திற்கு கடந்த ஓகஸ்டில் சென்றிருந்தார்.

பன்னிரண்டு நாட்கள் அக்கருத்தரங்கு இடம்பெற்ற வேளையில் தனது கட்டளையகத்தின் கீழுள்ள கடற்படையின் கனிஷ்ட அதிகாரிகளுடன் ஏராளமான தடவைகள் தொடர்புகளை ஏற்படுத்தி, நீண்ட நேரம் உரையாடி, பல சர்ச்சையான விடயங்களுக்கு ஆலோசனையும் தீர்வுகளும் கொடுத்திருக்கிறார்.

இதன் காரணமாக கைத் தொலைபேசிக் கட்டணமாக அந்த பன்னிரண்டு நாட்களுக்கு மட்டும் ஒரு லட்சம் ரூபா செலவை ஏற்படுத்தியுள்ளார் கடற்படைத் தளபதி சந்தகிரி.

## குருநாகலில் கடும் மழை 7அடி உயரத்தில் வெள்ளம்

(கொழும்பு நிருபர்)

குருநாகல் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பெய்த கடும் மழையினால் 7 அடி உயரத்துக்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

குருநாகலில் நேற்றுமுன்தினம் மாலையில் மட்டும் 100 மி.மீ இற்கும் அதிகமானளவு மழை பெய்திருந்தது. இந்த மழையினால் 7 அடி உயரத்துக்கு வெள்ளம் ஏற்பட்டிருப்பதுடன் 50 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றுள் 15 வீடுகள் முற்றாக நாசமாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## யாழ். இந்து மாணவனுக்கு கொழும்பில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனான பாலஸ்கந்தன்- கார்த்திக் என்ற மாணவனுக்கு எதிர்வரும் [..]ஆம் திகதி தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையில் உயர்ந்த பெறுபேறு பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளமையைப் பாராட்டியே அவர் கௌரவிக்கப்படவுள்ளார்.

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சர் தலைமையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் விழாவிலேயே செல்வன் கார்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.



**யா/இராமநாதன் கல்லூரியில் கடந்த 4ஆம் திகதி சைவத்திருமுறைவிழா இடம்பெற்றபோது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி மா.வேதநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர், உப அதிபர், இந்துமாமன்றக் காப்பாளர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (83)**

## வலி. கிழக்கு விவசாயிகள் மீண்டும் வாழைச் செய்கையில் அதிக ஆர்வம்

(உரும்பிராய்)

உரும்பிராய், கரந்தன், நீர்வேலி பிரதேச விவசாயிகள் மீண்டும் வாழைச் செய்கையில் ஆர்வம்காட்டி வருகின்றனர். தரைப்பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வாழைக் குலைகள் பெருமளவில் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் கூடிய விலைக்கு விற்பனை செய்து விவசாயிகள் அதிகளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

முன்னர் வாழை பயிரிடப்பட்டு அழிக்கப்பட்ட நிலப்பகுதிகளில் மீண்டும் வாழை மரங்களை நாட்டி வருவதாகவும் இதனால் இப்பகுதியில் நல்ல இன வாழைக்குட்டிகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் பருவமழை தற்போது பெய்து வருவதைத் தொடர்ந்து இப்பகுதி விவசாயிகள் பெருமளவில் மிளகாய், கோவா நாற்று மேடைகளையும் அமைத்து வருகின்றனர். (84)

# வாடும் உறவுகளின் விடுதலை கோரி......



விடுதலை கீதமில்லாத
சமாதான கீதமா?















# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உதித்தெழுந்தது!



மாணவர் சக்தியை
உலகறிய..















உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# யாழ். மீள் கட்டுமானத்தில் கணினியின் பங்கும் பயனும்!

ஈழநாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்டிருக்கின்ற களமுனை மாற்றம், பாராளுமன்ற ஆட்சிமாற்றம், யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை எல்லாம் கனவுபோல் நடந்தாலும் யாழ்.மண்ணினை மீளக்கட்டியெழுப்புவதெனும் பொருளில் பலரும் நிஜமாகவே சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் எமது தேசத்தின் வளர்ச்சியில் எவ்வாறு நவீன தொழினுட்ப வழியில் கணினி பங்களிக்கப்போகிறது எனச் சிந்திப்பது சிறந்தது.

இன்று யாழ்ப்பாணத்தில் பல அரச, தனியார் நிறுவனங்கள் தங்கள் தேவைக்குப் போதாவிட்டாலும்கூட குறிப்பிட்டளவு கணினிகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால இவை முழுவதும் அதன் உச்சப் பயன்பாட்டை பெறாத நிலையிலேயே இயங்குகின்றன. இந்நிலைமைக்குக் காரணம்

1. கணினியின் உச்சப்பயன்பாட்டை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்ற தொழினுட்ப அறிவின்மை.

2. அப்பயன்பாட்டை பெற்றுக் கொடுக்கக்கூடிய மனித வளமின்மை.

3. எங்களுடைய தேவைகளிற்குப் போதுமான கணினி இன்னும் கிடைக்கப் பெறாமை.

கணினி என்பது வன்பொருள் (**Hard-ware**), மென்பொருள் (**Software**) எனும் பிரதான இரு பகுதிகளைக் கொண்டு இயங்குகின்ற மனிதனால் கட்டளைப்படுத்தப்படுகின்ற ஒரு இலத்திரனியல் சாதனம். மனிதனின் ஒவ்வொரு செயல்களிற்கும் ஒரு உறுப்பு இருப்பதுபோல் கணினியில் தொழிற்படுகின்ற பகுதிகளே வன்பொருட்களெனவும், மனிதனிற்கு மூளை கட்டளையிட்டு கருமம் ஆற்றப்படுவதுபோல் கணினியில் இயங்குபவையே மென்பொருட்கள் எனப்படுகின்றன.

யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து சராசரியாக 50மாணவர்கள் கணினியில் கற்றுத் தேர்ந்து வருடாந்தம் வெளியேறினாலும் இவர்களினுடைய சேவையை முழுமையாக யாழில் பெறமுடியவில்லை. இக்கட்டத்தில் தனியார் நிறுவனங்களே பாரிய பங்களிப்பை வழங்க வேண்டியிருப்பதனால் இந்நிறுவனங்கள் தம்மை அந்நிலைக்கு தயார்படுத்தித் தயாராக வேண்டும். அப்போதுதான் இத்தொழினுட்பம்சார் அறிவு மக்களைச் சென்றடைய வழி பிறக்கும். பல்லாயிரம் மனித மணித்தியால வேலையை ஒரு கணினி சில மணித்தியாலங்களில் ஆற்றக்கூடியதாகவுள்ளது. ஆனால் தற்போது அவற்றின் 5%மான ஆற்றலே எம்மால் பிரயோகிக்கப்படுகின்றது. அதாவது அலுவலகங்களில் கடிதம் வரைதல் (**Letter typing**) மற்றும் அச்சக வேலைகளிற்கு மட்டுமே கணினியைப் பாவிக்கின்றார்கள். எனவே இந்நிலைமையை முற்றும் மாற்றியே தீர வேண்டும்.

இவை எல்லாவற்றிலும்விட கணினிசார் நிபுணர்களின் பற்றாக்குறை மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எமது பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாடுகளிற்கும் ஆகக்குறைந்தது கொழும்பிற்



பகுதி I

காவது செல்லும் ஆசையிலேயே வெளியேறுகின்றார்கள். கொழும்பில் பல தனியார் நிறுவனங்கள் தகுதியான கல்வியைப் புகட்டினாலும் அங்கு கற்பவர்கள் இங்கு வந்து சேவையாற்ற விரும்பாதிருக்கின்றார்கள். மென்பொருள் தயாரிப்போர் மற்றும் வன்பொருள் நிபுணர்களிற்கு பிறநாடுகளில் ஏற்படுகின்ற பற்றாக்குறையே இவற்றிற்கு மூலகாரணமாகும்.

சில பாடசாலைகளில் இன்று கணினி இருந்தாலும் கற்பித்தலில் உள்ள ஆளணி முகாமை இல்லாமை, பராமரித்தல் செலவீடு ஒதுக்காமை என்பன காரணமாகின்றன. மேலும் மாணவர்களின் பாடத்திட்டத்தில் கணினிக் கல்வி பல்கலைக்கழக நுழைவுக்கு சேர்த்துக் கொள்ளப்படாமையினால் மாணவர்கள் இதில் கூடிய ஆர்வம் காட்டாது உள்ளனர். பல பாடசாலைகளிற்கு இன்னும் மின்சாரவசதி இன்மை பாரிய பிரச்சினையாகும். பல வருடங்களாகியும் குடாநாடு பூராக சீரான மின்சாரம் வழங்கப்பட நடவடிக்கை சம்பந்தப்பட்டோரால் எடுக்கப்படாதிருக்கின்றது.

இன்று யாழ்.தீபகற்பத்தில் மொத்தமாக உள்ள கணினிகளில் 70% மானவை தனியாரிடமே உள்ளன. எனினும் இவை முழுவதும் போதிய பராமரிப்பின்மை, மின்சார வசதியின்மை எனும் காரணங்களால் தொழிற்படா நிலையிலேயே உள்ளன. அலுவலகங்களிற்கு கணினியை வழங்கும்போது அவற்றின் பராமரிப்பிற்கு எதுவித நிதியையும் ஒதுக்காது விட்டுவிடுகிறார்கள். இதற்கு இங்கு உள்ள மேலதிகாரிகளின் அறியாமையும் மேல்மட்டங்களில் இருக்கும் உயரதிகாரிகளின் அசமந்தப்போக்குமே காரணமாகும். மேலும் யாழ்.தவிர்ந்த பிறஇடங்களில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ள அரச அலுவலகங்கள்கூட இங்கு கணினிமயப்படுத்தலில் அசமந்தப் போக்கையே கொண்டுள்ளதன் காரணம் புரியவில்லை.

**வ.சிவகுமார்.**
**விரிவுரையாளர்-கணினி விஞ்ஞானம்.**

நவீன தொழினுட்பத்தில் தகவல் கிராமம் (**Global village**) என அழைக்கப்படும் சுருக்கப்பட்ட எமது உலகில் நாம் எங்கிருக்கின்றோம் என்ற கேள்வி எம்மைச் சிந்திக்கவே தூண்டுகின்றது. இணையப் பாவனை அறிமுகப்படுத்தப்பட்ட கையோடு உலகம் வெகுசீக்கிரமே விழித்துக்கொண்டது. வினாடிக்கு வினாடியாக அனைத்துக் காரியங்களும் விரைவுபடுத்தப்பட்டன. கல்வி, மருத்துவம், விவசாயம், தொழினுட்பம், வர்த்தகம் என அனைத்துப் பகுதிகளிலும் விரைவாகவும் மலிவாகவும் காரியங்கள் ஆற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருவர் எவரினதும் உதவியுமின்றி எவ்வொரு காரியத்தையும் செய்யக் கூடியதாகவுள்ளது. இன்று புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொழினுட்பங்களை உடனுக்குடன் அறிந்து கருமமாற்றக் கூடியதாகவுள்ளது. கணினி வலைப்பின்னலில் உங்கள் கணினியும் இணைக்கப்படுமாயின் உலகின் எப்பகுதியிலும் கணநேரத்தில் உங்களால் நுழைய முடியும். மிகவேகமாக கட்டியெழுப்பப்பட வேண்டிய யாழ்ப்பாணத்தில் மட்டும் இது சாத்தியப்படாமல் உள்ளது. இதற்கு ஒரு முக்கிய காரணமாக தொலைபேசிச் சீரின்மையைக் குறிப்பிடவேண்டும். அதாவது இன்ரநெற் வசதியைப் பெற்றுக்கொள்ள முக்கியமானது தொலைபேசி லைன் ஆகும். தகவல் பரிமாற்றத்திற்கு இது மிக சீரானதாக இருக்கவேண்டும். பல வருடங்களாக இச்சேவை குறித்து முறைப்பாடு செய்யப்பட்டும் இது சம்பந்தப்பட்டோரால் கருத்தில் எடுக்கப்படாதிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

அடுத்து கணினிகளைக் கொள்வனவு செய்வோர் தங்கள் தேவைக்கேற்ப தேவையான தரத்தில் கணினிகளைக் கொள்வனவு செய்யும்போது உங்கள் பணத்தை இலகுவாக சேமிக்கக்கூடியதாகவிருக்கும். சாதாரணமாக உங்கள் வீட்டில் உங்கள் பாவனைக்கு பென்ரியம் I வகைக் கணனி போதுமானது. இதன் மதிப்பிடப்படும் இன்றைய சந்தை விலை ரூ20,000 தொடக்கம் 30,000 வரையானதா கும். ஆனால் பலரும் கணினி வாங்குகின்றோம் என்று சொல்லிக்கொண்டு லட்சம் ரூபாய்வரை செலவு செய்து வீணே முதலை முடக்கி விடுகின்றனர். இதனை தவிர்க்க கணனித்துறைசார் நிபுணர்களை நாடுவதே சாலச் சிறந்ததாகும்.

இன்று முக்கியமான இன்னொரு விடயம் கணனிக்கல்வி சம்பந்தப்பட்டதாகும். யாழில் கணனிக்கல்வி எனும் போக்கில் இனிவரும் காலங்களில் அதைப் பார்க்கலாம்.

## சந்தை நிலைவரம்

| பொருட்கள் | திருநெல்வேலி | சங்கானை | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|---|
| முருங்கக்காய் | 30/- | 30/- | 15/- | 20/- |
| பூசணி | 10/- | 15/- | 15/- | 20/- |
| கத்தரி | 30/- | 50/- | 10/- | 30/- |
| வெங்காயம் | 35/- | 40/- | 35/- | 25/- |
| உருளைக்கிழங்கு | 55/- | 70/- | 60/- | 70/- |
| பாவற்காய் | 50/- | 40/- | 40/- | 50/- |
| பச்சைமிளகாய் | 60/- | 40/- | 35/- | 80/- |
| வெண்டி | 20/- | 20/- | 10/- | 25/- |
| பயிற்றை | 30/- | 40/- | 30/- | 60/- |
| கரட் | 15/- | 15/- | 40/- | 60/- |

# முட்டைகளை அடைகாக்க கிராமிய தொழில்நுட்ப பொறிமுறை!

தொழில்துறையில் நவீன தொழில்நுட்பங்கள் விரிவாகின்றபோதிலும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் அதிகளவில் அடிமட்ட மக்களே வாழ்வதால் அவர்களின் விருத்திக்காக கிராமிய தொழில்நுட்பங்கள் (**Rural technologies**) பெரும்துறையாக விரிந்து புதியனவற்றை புனைந்து வருகின்றன. வன்னியில் கடந்தகால பொருளாதாரத் தடைக்காலத்தில் - பல கிராமிய தொழில்நுட்பங்கள் உருவாகின.

அவற்றில் அரிக்கன் லாம்பில் 100 முட்டைகளையும், 800 முட்டைகளையும் அடைவைக்கும் அடைப்பொறி முக்கியமானதாகும். உலக நாடுகளில் மிக அடிமட்டத்தில்தான் அரிக்கன்லாம்பு அடைப்பொறி இருந்தது. இது எவரும் இலகுவாக கையாளக் கூடியதாக நவீன நுட்பத்துக்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டது.



எமக்கு எக்காலத்திலும் தேவையான நுட்பம் இது. வீட்டுக்குவீடு அடைக்கோழிகளை தேடாமல் எக்காலத்திலும் முட்டைகளை பெருந்தொகையில் அடை வைக்க இந்த அடைப்பொறி தேவையானதாகின்றது.

வி.சகாதேவன் என்ற இளைஞரே இந்த அடைப்பொறிகளை அமைத்தவர். 1999 இல் இவர் தனது முதல் புனைவாக 100 முட்டை அடைப்பொறியை உருவாக்கினார்.

மண்ணெண்ணெய் பரல் அரைவாசியாக வெட்டியெடுக்கப்பட்டு அதன் ஒரு பாதி அடைப்பொறிக்கான கொள்கலமாக ஆக்கப்படுகின்றது.

இதன் மையத்தில் அரிக்கன் லாம்பு வைக்கப்படுகின்றது. அதனைச்சூழ 45 பாகை சரிவில் மணல் பரப்பப்படுகின்றது. இந்தச் சரிவு மணலில் (படம்1) 3 வட்டமாக முட்டைகள் நிமிர்த்தி அடுக்கப்படுகின்றன.

அரிக்கன் லாம்பின் சிமிலி பரலின் மட்டத்தைவிட உயரமாக இருக்கவேண்டும். காரணம், அரிக்கன் லாம்பின் புகை முட்டைகளில் பரவி அதிலுள்ள காபன் மொனாக்சைட் பாதிப்பை ஏற்படுத்தும்.

பரலின் மேற்புறத்தில் ஒரு தட்டு மூலம் சிமிலி புகை உள்பரவாதும் தடுக்கப்படுவதுடன் உட்புறவெப்பம் வெளியே செல்லாதும் தடுக்கப்படுகின்றது. முட்டையில் கரு வளர்வதற்கு 39 பாகை செல்சியஸ் வெப்பம் தேவை. இதனை உணர, பொறியுள் இருக்கும் முட்டையை நாம் கண்மடலில் வைத்து - கண்மடலை உறுத்தாத வெப்பம் உணரப்பட்டால் அதுவே முட்டைக்கரு வளரப் போதுமான வெப்பமாகும்.

மேலும் அடைவைக்கப்படுவது முதல் 18ஆம் நாள்வரை முட்டை 90 பாகைக்கு 8 மணி நேரத்துக்கு ஒரு தடவை திருப்பப்பட வேண்டும். இது முட்டைக்கு வெப்பம் சகல பக்கமும் கிடைக்கவும் - கருவுக்கு இயங்கு தன்மையை ஏற்படுத்தவும் செய்கின்றது. கோழி அடைபடுக்கும் போது முட்டையை அசைக்கும் செயலும் இதற்கானதாகும். அடைப்பொறியுள் வெப்பம் அதிகமானால் மேல்மூடித் தட்டைத் திறந்து வெப்பத்தை குறைக்கலாம்.

அத்துடன் 7ஆவது நாளில் முட்டையை எடுத்து பிரகாசமான ஒளியில் பார்த்து இரத்தவரியுடையது கருவளர்வதாகவும் ஏனையவை கருவளராததாகவும் உள்ளது என்பதை உறுதி செய்யலாம்.

18 ஆம் நாளில் கருவளர்ந்து குஞ்சாகிவிடுவதால் அது தன் வெப்பத்தை வெளியிடுவதால் அதுமுதல் 21ஆம் நாள்வரை அரிக்கன்லாம்பு வெப்பம் முக்கியமானதாவதில்லை. 21ஆம் நாளில் முட்டையை உடைதது குஞ்சு வெளிவருகின்றது.

வன்னியில் இம்முறை மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. வீடுகளில், கிராமங்களில் வீட்டு முட்டைகளை அடைவைக்க இந்தப்பொறி இலகுவானதாகும். இதுபற்றி அறிய விரும்புவோர், செய்ய விரும்புவோர்- தமது தொடர்பு முகவரியை குறிப்பிட்டு இந்த நாளிதழ் முகவரியுடன் தொடர்பு கொண்டால் அதற்கான ஒத்துழைப்பினை இதன் புனைவாளர் வழங்கத்




தயாராகவுள்ளார்.

மற்றொரு தடவை 800 முட்டை அடைப்பொறி பற்றி விபரிப்போம்.

**தி.தவபாலன்**

# வடக்கு தெற்கு வர்த்தகமும் உலக வர்த்தக அமைப்பும்

## North South Trade and World Trade Organisation

1930களின் உலகப் பெருமந்தம், இதனைத் தொடர்ந்து வந்த இரண்டாம் உலக யுத்தம் ஆகியவை உலகப் பொருளாதாரத்தில் பல்வேறு நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. உலகப் பெருமந்தத்திற்கான காரணம் நாடுகளுக்கிடையில் போட்டியடிப்படையிலான நாணயப் பெறுமதியிறக்கமும் வர்த்தகத் தடைகளும் என்று பின்னர் உணரப்பட்டது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்ததும் சீர்குலைந்து போயிருந்த உலகப் பொருளாதாரத்தினைச் சீர்செய்வதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் அதனுடைய பல்வேறு செயற்பாட்டுக் கரங்களாக பல நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்புத்தான் தீர்வைகள் வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கை அல்லது கற் (**General Agreement in Tariff and Trade GATT**) என்பதாகும்.

1947ஆம் ஆண்டு 27 நாடுகளை மட்டும் அங்கத்துவ நாடுகளாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்ற நாடுகள் எல்லாம் கற்றிலும் (**GATT**) அங்கத்துவம் பெறலாயின. இவ்வுடன்படிக்கையின் கீழ் அங்கத்துவ நாடுகள் காலத்திற்குக் காலம் பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு நூறுக்கும் அதிகமான ஒப்பந்தங்களை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதிலும் தீர்வைகளைக் குறைப்பதிலும் வெற்றி கண்டுள்ளன. தீர்வைக் குறைப்பின் விளைவாக உலக வர்த்தகத்தில் பதினைந்து மடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கற் அமைப்பு இறுதியாக உருகுவே நாட்டில் தனது எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை 1987 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. மிக நீண்டகாலமாக இடம் பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் மரக்காஸ் (**Marakkash**) ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலக வர்த்தகத்தில் ஒரு புதிய பரிமாணமாக உலக வர்த்தக அமைப்பு (**World Trade Organisation-WTO**) உருவாகியது. இன்று இவ்வமைப்பு 135 அங்கத்துவ நாடுகளைக் கொண்டு ஜெனிவாவில் தலைமையகம் அமைத்து செயற்பட்டு வருகின்றது. இக் கட்டுரையின் நோக்கம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு உலக வர்த்தக அமைப்பு (**WTO**) வடக்கு தெற்கு வர்த்தகத்தில் உருவாக்கியுள்ள புதிய பரிமாணத்தை ஆராய்வதாகும்.

தீர்வைகள் வர்த்தகம் மீதான உடன்படிக்கை தோற்றுவிக்கப்பட்ட போது அதனுடைய செல்வாக்கின் கீழ் பண்ட வர்த்தகம் மட்டுமே இருந்தது. ஆனால் **W.T.O** வின் செயற்பாடு விரிவாக்கப்பட்டுள்ளது. இன்று சேவைகள் மீதான வர்த்தகம் அறிவுசால் சொத்துடமை (**Intellectual property**) என்பவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வர்த்தகத் தடைகள் குறைக்கப்பட்டு பொருட்கள் சேவைகள் மூலதனம் போன்றவை சுதந்திரமாகவும் எளிதாகவும் நாடுகளுக்கிடையில் அசைவுறும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் விவசாயப் பொருட்களின் வர்த்தகமும் முதல் முறையாக உள்ளடக்கப்பட்டது. **W.T.O** கற் அமைப்பினை விட அதிகாரம் கொண்டதாகும். அங்கத்துவ நாடுகளுக்கிடையில் வர்த்தகம் தொடர்பாக ஏற்படுகின்ற ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கொண்டது. ஒப்பந்தங்களை மீறுகின்ற நாடுகளுக்கு எதிராக தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க முடியும். அத்துடன் அந்நாடுகளின் ஏற்றுமதிக்கு எதிராகத் தடைகளை விதித்து ஒப்பந்தங்களை மதிக்காத நாடுகளை தனது வழிக்குக் கொண்டுவர முடியும். ஒவ்வொரு நாடும் தனது ஏற்றுமதியை உச்சப்படுத்தி மற்றைய நாடுகளின் இறக்குமதியை எவ்வாறு குறைப்பது என்ற சிந்தனையுடன் செயற்படுவதால் இந்த அதிகாரம் அவசியமாகின்றது. கற் அமைப்பு இந்த அதிகாரத்தைக் கொண்டிராத காரணத்தினால் அதனுடைய பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாட்டிற்கு வந்த பல வர்த்தக உடன்படிக்கைகள் செயலுருப்படுத்த முடியாமலே போய் விட்டன. ஐக்கிய நாடுகள் சபை ஈராக் நாட்டின் எண்ணெய் ஏற்றுமதி மீது விதித்த தடை வெற்றிகரமாக செயற்பட்டு வந்த தன் விளைவின் காரணமாகவோ தெரியவில்லை. இப்புதிய அமைப்பில் இவ்வதிகாரம் சேர்த்துக் கொள்ளப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இது ஒரு அச்சுறுத்தலாகவும் காணப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்காவிலுள்ள சியாற்றில் (**Siattle**) நகரில் உலக நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைக்குக் கூடிய போது அந்நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பல இடம் பெற்றன. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் தொழிலாளர் அமைப்புக்கள், சுற்றுச் சூழல் அமைப்புக்கள், முன்னேற்றப் போக்குடைய இடதுசாரி அமைப்புக்கள் எனப் பல தரப்பட்டவர்களும் செயற்பட்டனர்.

**இ.நந்தகுமாரன்**
**பீடாதிபதி, வவுனியா வளாகம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

உலக வர்த்தக அமைப்பு இரண்டு பிரதான குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறது.

1.எல்லாவிதமான வர்த்தகத் தடைகளையும் அகற்றி சுதந்திர வர்த்தகத்தை மேம்படுத்தல். இச் செயற்பாட்டின் மூலம் உலகம் முழுவதையும் ஒரு சந்தையாக மாற்றுதல்.

2.வர்த்தகத்தின் மூலம் எழும் பிரச்சினைகள், சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல். உள்ளூர் சந்தைகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் திறந்து விடுதல் அதாவது பல்நாட்டு நிறுவனங்களை உள்நாட்டு அரசாங்கங்களின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவித்தல் என்று கூறலாம்.

இந்நடவடிக்கைகள் மூலம் ஒப்பீட்டு ரீதியில் பணம், மூலதனம், பொருட்கள் சேவைகள் தங்குதடையின்றி அசைவதற்கு இடமளிக்கின்ற அதேசமயம் அவர்களது சொத்துடமைகளுக்கும் பரந்தளவிலான பாதுகாப்பு வழங்குகின்றது. வர்த்தக உடன்படிக்கைகளில் அறிவுசால் சொத்துடமை என்பது புத்தி ஜீவிகளின் ஆக்கும் திறனைக் குறிக்கவில்லை. மாறாக நிறுவனங்களின் உரிமையையும், தாவரங்கள், செயல்முறைகள், விதை வகைகள், மருந்துகள், கணினி மென்பொருட்கள் (**Softwares**) போன்றவை மீதான ஆக்கவுரிமையை பாதுகாத்தலேயே குறிக்கின்றது. அறிவுசால் சொத்துடமை வர்த்தகத்தினுள் காணப்படும் பரந்தளவிலான தடைக்கு ஓர் சிறந்த உதாரணமாகும். இதன் மூலம் கூட்டுத்தாபனங்களுக்கு பாதுகாப்பும் தொழிலாளர், நுகர்வோர், சிறு விவசாயிகளுக்கு கடினமான சந்தை ஒழுங்குகளையும் புகுத்தியுள்ளனர் எனலாம்.

உலக வர்த்தக நிறுவனம் சமூகப் பிரச்சினைகளில் தலையிடுவது தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது எனக் கருதுகின்றது. ஆனால் சேவைகளில் வர்த்தகம் செய்யத் தொடங்கியதும் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளும் உருவாகின்றது என்பதை மறந்து விடுகின்றது. ஒரு பொருளுடன் அல்லது சேவையுடன் மட்டுமே **WTO** செயற்படுமே அல்லாமல் அப் பொருளோ அல்லது சேவையோ உருவாக்கப்படும் செயல் முறையுடன் அல்ல என்று திட்டவட்டமாகக் கூறுகின்றது. பொதுவாக நுகர்வோர், தொழிலாளர் அமைப்புக்கள், சுற்றுப்புறச் சூழல் அமைப்புக்கள் எல்லாம் இறுதிப் பொருளில் மட்டும் கவனத்தை செலுத்தாமல் அப்பொருள் ஆக்கப்படும் முறையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. இத்தகைய வலியுறுத்தல்கள் பெரும்பாலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்தே வருகின்றன. இது வளர்முக நாடுகளின் ஏற்றுமதிக்கு எதிராகக் கொண்டு வரப்படும் மறைமுகத் தடையென்றே எண்ணத் தோன்றுகிறது.

வளர்ச்சியடைந்த குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து இவ்வாறு வாதிடப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் முறையில் கவனம் செலுத்துவதன் மூலமே பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னேற்றலாம். அச்சுறுத்தல்களை தவிர்க்கலாம், சுத்தமான செயல் முறையை விருத்தி செய்யலாம். எனவே இறுதிப் பொருளையல்ல அந்தப் பொருள் உற்பத்தி செய்யப்படும் செயல் முறையை முழுமையாக கவனத்தில் கொள்ளவேண்டும்.



உதாரணமாக தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்பட்டு சட்டதிட்டங்கள் செயற்படுத்த முடியாத சூழ்நிலையில் தொழிலாளர்கள் செயற்பட்டு பொருள் உற்பத்தி செய்யப்படும் நிலையில் உ.வ.நிறுவனம் எதுவும் செய்வதற்கில்லை. ஆனால் முதலீட்டாளர்கள் அல்லது அவர்களது முதலீடு அச்சுறுத்தலுக்கு உட்படும்போது தனது சட்டதிட்டங்களைப் பயன்படுத்தி அவரைப் பாதுகாக்க முடியும். மேற்கூறிய தொழிலாளர்கள் ஒரு வீடியோ படச் சுருளை அதன் பதிப்புரிமையை மீறி பிரதி பண்ணும்போது உ.வ.நிறுவனம் உடனடியாக அந்த நாட்டின்மீது பல நடவடிக்கைகளை மேற்கொண்டு முதலீட்டாளரது அறிவுசால் சொத்துரிமையைப் பாதுகாக்கமுடியும்.

இந்த இடத்திலேயே வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் பக்கம் நின்று பார்க்கும் போது வளர்ச்சியடைந்த நாடுகளின் நிலைப்பாடும், உ.வ. நிறுவனத்தின் நிலைப்பாடும் பாதகமாகவே அமைகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளின் நிலைப்பாட்டில் கவனம் செலுத்தி குழந்தை தொழிலாளருக்கு தடை, சுற்றுப்புற சூழல் நியமங்கள், தொழிலாளர் நியமங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தினால் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் உற்பத்திகளுக்கு ஏற்றுமதிச் சந்தையை பெற்றுக் கொள்வது கடினமாகும். தற்போது தொழிலாளர்கள் மிகையாகக் காணப்படுவதால் இந்நாடுகளின் தொழிற்செறிவான உற்பத்திகள் ஒப்பீட்டு நயம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளது போல சுற்றுப்புற சூழல் நியமங்கள், தொழிலாளர் நியமங்கள் இங்கும் நடைமுறைப்படுத்தப்படின் தற்போது காணப்படும் ஒப்பீட்டு நயம் அற்றுப்போய் விடுவதனால் இவற்றை ஏற்றுமதிச் சந்தைக்கு உற்பத்தி செய்யமுடியாமல் போகலாம் அல்லது கடுமையான ஏற்றுமதிப் போட்டியைச் சந்திக்க நேரிடும்.

வளர்முக நாடுகள் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதனால் குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்றனர் என்ற குற்றச் சாட்டும் முன்வைக்கப்படுகின்றது. குழந்தைத் தொழிலாளர்கள் பெருமளவில் வேலை செய்கின்றார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் அவர்கள் வறுமையின் பொருட்டே அவ்வாறு வேலைசெய்ய முன்வருகின்றார்கள் என்பதை மறந்து விடலாகாது. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதைத் தடை செய்தால் அவர்களது ஊதியத்தையே நம்பி வாழும் எத்தனையோ இலட்சக்கணக்கான குடும்பங்கள் பட்டினியில் வாடவேண்டியிருக்கும்.

மறுபுறமாக உலக வர்த்தக நிறுவனத்தின் நிலைப்பாட்டை எடுத்தால் வளர்முக நாடுகளில் அறிவுசால் சொத்துடமை என்பதன் பெயரால் நுகர்வோர், உற்பத்தியாளர்கள் தமது உள்ளீடுகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிவரும். உதாரணமாக விதை வகைகளுக்கு ஆக்கவுரிமையைப் பெற்றுக்கொண்டால் உள்நாட்டில் ஆக்கவுரிமை பெற்றவர் மட்டுமே உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம். ஆக்கவுரிமைக்கான செலவும் விதை உற்பத்திச்செலவில் காணப்படும். இதனால் விவசாயிகள் கூடுதல் விலைக்கே விதைகளைக் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும். இதேபோன்று தாவரங்கள் மீது அறிவுசால் சொத்துடமையை பெற்றுக் கொண்டால் அந்த தாவரங்களைப் பயன்படுத்தும் உரிமையை உள்ளூர் மக்கள் இழந்து விடுவார்கள். இவற்றைப் பயன்படுத்தி நோய் தீர்க்கும் பல்வேறு மருந்துகளையும் இயற்கையான பசளைகளையும் கிருமி நாசினிகளையும் உற்பத்தி செய்து உயர்ந்த விலைக்கு விற்க முடியும்.

*(மிகுதி அடுத்த வியாழன் தொடரும்)*

## இயற்கைச் சுவைதரும் பழவகைகள் இனிதாய் பதமுடன் 'ஜகுபி'யில்!

மீள்கட்டமைப்பு புனரமைப்புச் செய்யப்படுகின்ற வட-கிழக்கு மாகாணப்பிரதேசத்தில் உற்பத்தித் தொழிற்சாலைகள் இன்றியமையாததாகும். இந்த வகையில உடுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜகுபி பழத்தொழிற்சாலையானது சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தின் கீழ் இயங்குகின்றது. இத்தொழிற்சாலையில் -

1)நெல்லிரசம்
2)மாம்பழக் கோடியல்
3)பழக்கலவைக் கோடியல்
4)எலுமிச்சம்பழக் கோடியல்
5)ஜாம்
6)ஊறுகாய்
7)தக்காளிச்சோஸ்

போன்ற பொருட்கள் உற்பத்தியாக்கப்படுகின்றன. இந்த உற்பத்தி நிறுவனத்தினால் சிறு விவசாயிகள் மற்றும் பழச்செய்கையாளர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் நேரடியாக விற்கிறார்கள். இதுதவிர இங்கு 15 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இதனால் இப்பிரதேச வேலை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் தென்னிலங்கைக்கும் கொண்டு சென்று விற்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் ஆரம்பத்திற்கு **Action Faim** இயந்திரங்களை இலவசமாக வழங்கிப் பயிற்சியளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனத்தின் விற்பனைச் சுழற்சி அதிகமாக இருக்கின்ற போதிலும் அதற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் உற்பத்தி செய்வதற்குரிய இயந்திரவசதி குறைவாகக் காணப்படுவதுடன் விநியோகத்திற்கு தேவையான வாகன வசதியும் குறைவாக காணப்படுவதாக இச்சங்கத்தின் தலைவர் சி.குமரவேல் தெரிவித்தார்.

இனிவரும் மழைக்காலத்தில் பழங்களின் உற்பத்தி வருகை அதிகமாக காணப்பட்டு பழங்களின் சந்தை விலை வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்காலங்களில் பழங்களைச் சாறாக்கி வைக்கக்கூடிய குளிர்சாதன அறைவசதியும் தங்களுக்கு இருக்குமேயானால் தாங்கள் இந்தப் பிரதேசத்தில் அதிகபொருட்களைக் கொள்வனவு செய்வதுடன் அதிக வேலை வாய்ப்புக்களையும் வழங்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். இத்தகைய வசதிகளைச் செய்துதருமாறு தொண்டு நிறுவனங்களிடமும் அரசிடமும் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார்.

த.தர்பாகரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சமூகத்தின் விடுதலை என்பது பெண்களின் விடுதலையிலேயே தங்கியுள்ளது.*

-கிளிப்பேர்ட்

# நமது நோக்கு

## உலகிற்கே முன்மாதிரியானவர்கள் தமிழீழப் பெண்கள்!

தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் இன்று வெகு உணர்வெழுச்சியுடன் கொண்டாடப் படுகிறது.

இன விடுதலையுடன், சமூக விடுதலையையும் முன்னெடுக்கும் பாதையில், இன்று வீறுநடை போடும் தமிழீழப் பெண்களின் ஆற்றலையும், இலட்சியப் பற்றையும், அர்ப் பணிப்பையும் உரத்துச் சொல்லும் நாளாக இன்றைய எழுச்சி நாள் திகழ்கின்றது.

பாரம்பரியம், மரபு எனக் கூறிக்கொண்டு- அடிமைத் தளைகளால் சிறைப்பட்டிருந்த பெண்கள்-இன்று சமூகத்தை வழிநடத்தும் தலைவர்களாகவும், திறன் மிக்கவர்களா கவும் வளர்ச்சி பெற்று நிற்பதை தமிழினம் புளகாங்கிதமுடன் நோக்கும் காலம் இது.

சீரிய தலைமைத்துவத்தின் வழிநடத் தலில்-தமிழீழப் பெண்கள் கண்டுள்ள இப் புரட் சிகர மாற்றத்தை முழு உலகுமே இன்று வியப் புடன் நோக்குகின்றது, பாராட்டுகின்றது.

இந்த மாற்றம் வெகு இலகுவாகக் கிடைத்து விடவில்லை. காலம் காலமாக- எமது சமூகத்தினுள் அழுந்திக் கிடந்த மூடநம்பிக்கைகளையும், ஆணாதிக்கம் மிக்க பாரம்பரியச் சிந்தனைகளையும் உடைத் தெறிந்து வர இரண்டு தசாப்தங்களை கடக்க வேண்டியிருந்தது.

இந்தப் பெரும் சமூக மாற்றத்தை, சமூக விடுத லையைப் பெற்றுக் கொடுத்த பெருமை விடுதலைப் போராட்டத்தையும், போராட்டத் தின் தளர்வில்லாத தலைமையையுமே சார்ந்தது என்றால், அது மிகையில்லை என்று கூறலாம்.

தமிழீழப் பெண்கள்-தனித்தே தமது வீடே கதி என்றிருந்த நிலையை மாற்றி, இன விடுதலைக்கான ஒரு வலுப் பெற்ற போராட்ட சக்தியாக இன்று வளர்ந்திருக்கின்றநிலை எமது சமூகத்தில் மட்டுமல்லாது, சர்வதேச ரீதியாகவும் பெண்கள் பற்றி நிலவிய மூடத்தனமான கொள்கைகளை உத்வேகத் துடன் மாற்றம் காணச் செய்து வருகின்றது.

உளரீதியாக மட்டுமல்ல உடல் ரீதியாகவும் திறமையுடன் சமர்க்களங்களில் பெண் போரா ளிகள் காட்டிய வீரமும், விவேகமும் தமிழ்ப் பெண்களின் பெருமையை உலகளவில் பறை சாற்றியிருக்கின்றன. இத்தகைய பங்காற் றுதல்-அரசாங்கத்தினதும், அரச படைகளி னதும் இனவன்முறைகளாலும், ஒடுக்கு முறையாலும் இன்னமும் தீவிரம் பெற்றதையும் நாம் மறந்து விட முடியாது.

இன்றைய எழுச்சி நாளில் பெண் விடுதலை யையும், சமத்துவத்தையும் இன்னமும் உறுதிப்படுத்துகின்ற, பாதுகாக்கின்ற பொறுப்பினை ஒவ்வொரு மக்களும் தங்கள் மனங்களில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட உறவுநிலை தொடங்கி சமூக நிலை வரை- பெண்ணியம், பெண் விடுதலை என்பதை வெறும் வாய்ச்சொல் ஆகிவிடாது- அதனைச் செயலில் காட்டுவதற்கு ஒவ்வொ ருவரும் முன்வரவேண்டும்.

இன்றைய தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளில் இந்த திடசங்கற்பத்தை மனதில் பூண்டவர்களாக நாம் உறுதி கொள்வோ மாயின் அதுவே இன்றைய தினத்தின் வெற் றியாகவும் அமையும்.

# மட்டு சிறையில் உண்ணாவிரதமிருந்த ஆறு கைதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வந்த 17 கைதிகளில் ஆறுபேர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டதையடுத்து தமது போராட்டத்தைக் கைவிட்டுள் ளனர்.

மட்டக்களப்பு சிறையிலும் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நான்கு அரசியல் கைதிகள் திங்களன்றும், இருவர் செவ்வாயன்றும் அம்பாறை நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனையடுத்தே இந்த அறுவரும் தமது உண்ணா விரதத்தைக் கைவிட்டுள்ளனர். ஏனைய பதினொரு கைதிகளும் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

# சட்டவிரோத மண்ணகழ்வினால் நெல்வயல்களில் வெள்ள அபாயம்!

(வடமராட்சி)

கரவெட்டி தெற்கிலுள்ள இருநூறு ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களில் இவ்வருடம் பயிரழிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக கரவெட்டி தெற்கிலுள்ள மாதூர், தம்பான், கஞ்சாமம் ஆகிய பகுதிகளிலுள்ள வயல்கள் மற்றும் வயல்களுக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்ட வரம்புகளில் இருந்து சட்ட விரோதமான முறையில் மண் ஏற்றப்பட்டுள்ளது.

இதனால் வெளியிடங்களிலிருந்து வரும் வெள்ளம் வயல்களில் உட்புகுந்து நெற் பயிர்களை சேதப்படுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மாரி காலங்களில் கடல் நீர் வெளியிடங்களில் இருந்து பெரும் வெள்ளங்கள் உட்புகாதபடி மாதுவிலிருந்து வரணிப்பகுதி வரை கஞ்சாமத்துடன் இணைக்கும் பாரிய மண் அணையிலிருந்தும் மண் ஏற்றப்பட்டுள்ளதால் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட நெல் வயல்களில் இம்முறை வெளிநீர் சென்று அழிவுகளை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

இம் மண்ணணைகளை மீள அமைத்து நெற்பயிர்களின் வெள்ள அழிவுகளில் இருந்து பாதுகாக்குமாறு பொது அமைப்புக்கள், பிரதேச செயலர்களிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (23)

## விடுதலைப் புலிகளில் இணைந்த மூவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இருந்து விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்ட 18 வயதிற்குட்பட்ட மூன்று சிறுவர்கள் மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றைய தினம் வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பணிமனையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் நடுவப்பணியகத்தைச் சேர்ந்த கந்தம்மான், மற்றும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின ரும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஆகியோ ரும் கலந்து கொண்டனர்.

# மீண்டும் திறந்தபல்கலை விஞ்ஞானமாணி கற்கை நெறி யாழில் ஆரம்பிக்கப்படும்

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் சுமார் ஏழு வருடங்களின் பின்னர் மீண்டும் திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிமாணி கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ் பிராந்திய இணைப்பாளர் ச.ஆ.ஞானேந் திரன் மேற்கொண்டு வருகின்றார்.

1995 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் விஞ்ஞானமானி வெளிவாரி கற்கை நெறி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் செய்முறை வகுப்புக்க ளுடன் ஆரம்பிக்கப்பட்ட போதும் போதிய விரிவுரையாளர்கள் மாணவர் கள் இன்மையால் இக்கற்கை நெறி கைவிடப்பட்டது.

இதனால் விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் ஆசிரியகளும் வெட்டுப்புள்ளி யால் பல்கலைக்கழகம் புக முடியாத மாணவர்களும் பெரும் ஏமாற்றம் அடைந்திருந்தனர். மிகச் சிலரே கொழும்பு சென்று இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இக்கற்கை நெறியினை பூர்த்தி செய்தனர்.

எனினும் தற்போதைய சமாதான சூழ்நிலையில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் நடத்த திறந்த பல்கலைக்கழக நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கான செய் முறை வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கற்கை நெறிக்காக விண் ணப்பித்தவர்களுக்கான பதிவுகளை இன்று 10ஆம் திகதி மேற்கொள் வதற்காக பதினைந்து பேரடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது. (57)

# மூடப்பட்டுள்ள பருத்தித்துறை – மருதங்கேணி வீதியால் பாதிப்படையும் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி!

(வடமராட்சி)

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி மூடப்பட்டுள்ளதால் யுத்த நடவடிக்கைகளளினால் அழிந்துள்ள வடமராட்சி கிழக்கு பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய முடியாது ள்ளதாக வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தினை பிரிக்கும் வகை யில் நாகர் கோவில் பாரிய இராணுவ முகாம் அமைந் துள்ளதால் இம்முகாமூடாக செல்லும் பிரதான வீதி மூடப் பட்டுள்ளது.

இதனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கை யினால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள அரச கட்ட டங்கள்,வீடுகள்,பொது கட்டடங்கள் என்பன முற்றாக சேத மடைந்துள்ளன.

அழிவுக்குள்ளான இப்பிரதேசத்தினை மீண்டும் கட்டியெ ழுப்புவதற்கு இப்பாதை இடையூறாக அமைந்துள்ளதுடன் அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளமுடியா துள்ளது.

அதேவேளை நாகர்கோவில் தடை முகாம் அமைந் துள்ள பகுதிக்கு செம்பியன் பற்று முதல் சுண்டிக்குளம் வரையாக அமைந்துள்ள பாடசாலைகள், அரச கூட்டுற வுத்திணைக்களங்களில்

கடைமையாற்றும் ஊழியர்கள் நீண்ட தூரம் சுற்றி பளை ஊடாகவே போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்கு, நாகர் கோவில் வடக்கு பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் வடமராட்சி பிரதேசத்திலுள்ள முகாம்களிலும் உற வினர் வீடுகளிலும் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை மீள குடியமர அனும திக்க வேண்டும் என கோரி வடமராட்சி கிழக்கு புனரமைப் புக்குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர்களான அப்பாத் துரை விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழு, அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பியுள்ளது. (23)

# பணத்தைக்காட்டி 13 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க முயற்சி!

## - ஏறாவூர் குடும்பஸ்தர் புலிகளின் விசாரணையில் -

(மட்டக்களப்பு நிருபர்)

ஏறாவூரில் பணத்தைக் காட்டி 13 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற குடும்பஸ்தர் ஒருவ ரைப் புலிகள் விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் கடந்த திங்கட் கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி சிறுமியை குடும்பஸ்தர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றவேளை அதனை அவதானித்த அயலிலுள்ள பொது மக்கள் 4 பிள்ளைகளின் தந்தையான குறிப்பிட்ட நபரைப் பிடித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் ஏறாவூர் அரசியல் துறைப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

புலிகள் மேற்படி நபரைத் தொடர்ந்தும் விசாரணை செய்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

# 24 மணிநேரத்தினுள் வெளியேறிய தமிழர்! மணலாற்றில் மீண்டும் தமிழ் மணக்குமா?

1984 டிசம்பரில் ஒலிபெருக்கி அறிவிப்பு மூலம் 24 மணித்தியாளங்களுள் தமது சொந்த இடங்களை விட்டு இராணுவத்தால் விரட்டப்பட்ட மக்கள் மீண்டும் தமது சொந்த இடத்துக்கு திரும்ப புரிந்துணர்வு உடன்பாட்டின் கீழ் ஏங்குகின்றனர்.

வடக்கையும் - கிழக்கையும் பிரிக்கும் எல்லையாக உள்ள மாஓயாவுக்கு வடக்காக உள்ள கரையோர கொக்கிளாய், அதற்கு வடக்காக உள்ள கொக்குத்தொடுவாய், விவசாயக்கிராமமான கருநாட்டுக்கேணி ஆகியவற்றிலிருந்து இடம் பெயர்த்தப்பட்டு இரவல் காணிகளில் வாழும் மக்களே தமது தாய் மண் திரும்ப ஏங்குகின்றனர்.

வெலிஓயா என 1989இல் அரசால் பிரகடனம் செய் யப்பட்ட மகாவலி L வலய சிங்களக் குடியேற்றத்திட்டமான வெலிஓயாவின் கேந்திர முக்கியம் வாய்ந்த படைநிலைகளாக இந்தக் கிராமங்கள் உள்ளன. இராணுவத்தின் 22-3ஆம் பிரிகேட் படையினரின் பிரதான முன்னரணாக கொக்குத்தொடுவாய கிராமம் உள்ளது. கொக்கிளாய் 1960களிலே சிங்கள மீனவர்களால் ஆக்கிரமிக்கப்படத் தொடங்கியது.

இன்று இக்கிராமங்களின் மக்கள் பிரதானமாக முல்லைத்தீவில் வாழ்கின்றனர். மீன்பிடியையும், விவசாயத்தையும் தொழிலாகக் கொண்ட இம்மக்கள் இன்று கூலிகளாக வாழ்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த 657 குடும்பங்களே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஏனைய பகுதிகளில் சிதறி வாழும் இக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கையை பார்த்தால் -கொக்கிளாயைச் சேர்ந்த 410குடும்பங்களில் 2050 பேரும், கருநாட்டுக்கேணியின் 825 குடும்பங்களைச் சேர்ந்த 1825பேரும், கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த 875 குடும்பங்களைச் சேர்ந்த 4375 பேரும், செம்மலை கிழக்கைச் சேர்ந்த 175 குடும்பங்களின் 875 பேருமாக 2285 குடும்பங்களின் 9125 பேர்- சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டியவர்களாவர். சிங்கள மீனவர்களதும், படையினரதும் பிரசன்னத்துள் இருக்கும்- முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட கடல் வளம் கொழிக்

அறிதிரு

கும் கிராமங்கள் இன்று அனுராதபுரத்தின் பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டதாக உள்ளன.

போர் காரணமாக இடம் பெயர்ந்த தாயக மக்களில் நீண்ட கால அகதிகள் இந்த மணலாறு




வாசிகளாவார்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் தரைத் தொடர்பினை துண்டிக்க மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றத்தால் தாய் மண் இழந்தவர்கள் இவர்கள்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் படி தம் சொந்த நிலங்களில் இந்த மக்கள் குடியேற விரும்பி அதற்கான கோரலை விடுத்தனர். இதற்கு இராணுவம் மறுத்தது. இதன் அடுத்த கட்டமாக இம் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து பிரதமருக்கு மனு அனுப்பினர்.

இதற்குப் பதிலாக பிரதமரின் செயலகத்தில் இருந்து முல்லைத்தீவு அரச அதிபருக்கு சுற்றறிக்கை ஒன்று சென்றது.

மணலாறின் குறித்த 3 கிராமங்களில் மீளக் குடியமரத் தயாராக உள்ள குடும்பங்களின் விபரங்களையும், குடும்பமொன்றில் 2பேரின் விபரங்களை சிறப்பாகவும், மேற்படி கிராமங்களிலிருந்த வீடுகள், பாடசாலைகள், கட்டிடங்கள் மற்றும் உட்கட்டுமானங்களின் விபரங்களையும், இப்பகுதியில் படையினரின்நிலையையும் தருமாறு அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் கடைசியான விடயம் தவிர்ந்த ஏனையவற்றை திரட்டி அரச அதிபர், பிரதமரின் செயலகத்துக்கு விபரம் அனுப்பியுள்ளார்.

சரி-இதை வைத்து அந்த அகதிகளுக்கு தாய்மண் செல்லும் பாக்கியம் கிடைக்குமா என்பது பெரிய கேள்வியே.

## விடத்தல் பளையில்

# நடுவீதியில் அமைக்கப்பட்டுள்ள காவலரணால் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலை!

விடத்தல்பளையில் இராணுவத்தினர் காவலரணை நடுவீதியில் அமைத்துள்ளதால் அங்கு மீளக் குடியமர்ந்து வரும் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் இப்பகுதியில் வாழும் மக்கள் தமது அன்றாட கடமைகளை நிறைவு செய்வதற்காக நீண்ட தூரம் சுற்றியே செல்ல வேண்டியுள்ளது.

மாணவர்கள் பாடசாலை செல்வது தாமதப்படுவதாகவும், நோயாளிகளுக்கும் உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாதும் இருப்பதாக அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (36)



குருநகர் துணையிழந்தோர் சங்க ஆண்டு விழாவை ஆரம்பித்து வைக்கும் கியூடெக் இயக்குநர் சீ.யீ. ஜெயக்குமார் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் சென். ஜேம்ஸ் ஆலய பங்குக்குரு ஜெயசேகரம் அடிகளாரும் படத்தில் காணப்படுகின்றார்.

# கராத்தே ஆசிரியர், மாணவர்களுக்கு கலந்துரையாடல்

கராத்தே சுற்றுப்போட்டி யொன்றை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நாளை மறுதினம் காலை 10.00 மணியள வில் நடைபெறவுள்ளதாக வித்து மாணவர் சஞ்சிகை அலுவலகம் அறிவித்துள்ளது. இதில் கராத்தே ஆசிரியர்களையும் கறுப்புப்பட்டி மாணவர்களையும்கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. கலந்துரையாடல் இல.966, பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள வித்து அலுவலகத் தில் நடைபெறும்.

## மக்கள் அரங்கு

### நொத்தாரிசாக நியமனம்!



கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த முதலித்தம்பி சேது காவலர் இராசையா இவ்வருடம் யூன் மாதம் நடைபெற்ற நொத்தாரிஸ் இறு திப் பரீட்சையில் சித்தியெய்தி நொத்தாரிசாகக் கடமைபுரியத் தகுதி பெற்றுள்ளார்.

இவர் பொது எழுதுநர் சேவையில் 30 ஆண்டுகள் சேவையாற்றிய பின்னர்- அச்சேவையின் தரம் 1 லிருந்து தனது 49 வயதில் ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுச் சேவைகளிலும் ஈடுபாடுடைய இவர் கைதடி வீர கத்திப் பிள்ளையார் கோவில் பரிபா லன சபையின் பொருளாளராகவும் கடமைபுரிகிறார்.

# செல்வச்சந்நிதிக்கு வரும் பக்தர்கள் அதிகரிப்பு!

(அச்சுவேலி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகளும் உள்ளூர் பக்தர்களும் சந்நிதி ஆலயத்திற்கு வருவது அதிகரித்திருக்கின்றது. ஆலய தரிசனம் முடிந்தபின்னர் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடக்கும் அன்னதான வைபவங்களிலும் பக்தர்கள் கலந்து கொள்வதைக் காண முடிகின்றது.

# குப்பை எரிக்க குண்டு வெடித்தது சங்கத்தானையிலும் சம்பவம்

(கச்சாய்)

சங்கத்தானை முருகமூர்த்தி கோவிலின் பின் வீதிக்கு அருகில் உள்ள காணியொன்றைத் துப்பரவு செய்து குப்பைகளை எரித்த போது கடந்த திங்கள் அன்று குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றது. இதனால் அப்பகுதி அதிர்ந்தது.

இப்பகுதியின் அண்மையில் வெடிபொருள் ஒன்று வெடித்ததையடுத்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஷெல்கள் படையினரால் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பகுதியில் வெடிக்காத நிலையில் வெடி பொருட்கள் காணப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன.(33)

# யாழ்.பல்கலை உடற்கல்வி டிப்ளோமா இறுதியாண்டில் சித்தியடைந்தோர்

யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா 2002 பரீட்சையில் இறுதியாண்டில் தோற்றிய 56 மாணவர்களில் 41 பேர் சித்தி அடைந்துள்ளனர். அவர்களது பெயர் விபரம் வருமாறு.

திறமைச்சித்தி:

எ.ஆனந்தன், எம்.டனிஸ்ரன், செல்வி கே.கார்த்திகா, ஆர்.குகன், திருமதி.ரி.லோகநந்தினி, என்.சஞ்ஜிவ், எஸ்.சாருசன், எம்.சசிக்குமார், செல்வி ரி.சாமினி, ரி.சுதர்ஷன், எம்.திவாகர், பி.ஜெயகரன்.

சாதாரண சித்தி:

செல்வி பாமினி, செல்வி எ. கார்த்திகா, ரி.கௌரிபாலன், ஜே.ஜெயகாந்தன், ந.காந்தரூபன், செல்வி எஸ்.மடோனா, கே.மதியழகன், செல்வி எம்.மோகனப்பிரியா, ரி.நாகநாதன், எஸ்.வெலிங்ரன், ரி.புஸ்பரட்ணம், எம்.ரவிஅன்ரனி, ந.சசிகரன், எஸ்.செல்வரதன், எஸ்.சிவதீபன், எஸ்.சிறிதரன், ரி.சுஜிந்திரமோகன், கே.தேவகாந்தன், செல்வி.ரி.விஜிகலா, ரி.விமலன், பி.கஜேந்திரன், என்.தவக்குமார், வி.ஐங்கரன், ஏ.தயாளன், கே.கனகராஜ், ஆர்.ரகுராம், ஆர்.சிவசேகரன் ஆகியோரே சித்தியடைந்தவர்களாவர். (65)

# வேம்படிச் சந்தியில் வாகனவிபத்து!

(பாண்டியன் தாழ்வு)

யாழ். வேம்படிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை11.15 மணியளவில் இராணுவ ரக் வண்டியும் தனியார் வான் ஒன்றும் மோதிக் கொண்டன.

யாழ். ஆஸ்பத்திரி வீதியின் கிழக்குப்பக்கமாக இருந்து வந்த ஆரியகுளம் வீதியால் திரும்ப முற்பட்ட இராணுவ ரக் வண்டியும் மேற்குத்திசையில் இருந்து வந்த வானும் மோதிக் கொண்டன. விபத்தில் வானின் முன்பகுதி சிறு சேதத்திற்கு உள்ளானது. அத்துடன் அங்கு கூடிய ராணுவத்தினர் வான் சாரதியை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் தெரியவருகின்றது. (65)

# கேள்வி அறிவித்தல்

## கட்டடங்கள் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை.

1. வடக்கு கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் கோப்பாய் சுற்றியற்கூறில் காச நோயாளருக்கான தனிப்பட்ட வாட்டிற்கான மிகுதி வேலைகள் நிர்மாணிப்பதற்கான கேள்விகள் 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி பிற்பகல். 3.00 மணி வரை இத் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் இத் திணைக்களத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில்(ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்-7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்க ளடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/- ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.
5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**வடக்கு-கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி, திருகோணமலை.**
**திகதி:08.10.2002**

**எந்திரி அ.வேல்மாணிக்கம்,**
**தலைவர்,**
**திணைக்கள கேள்விச் சபை.**
(சி-050)

# பருத்தித்துறை குடிநீர் விநியோகம் மீள ஆரம்பம்

(பருத்திதுறை)

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் நிறுத்தப்பட்டிருந்த குடிநீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பகுதிகளில் நிலவிய கடும் வரட்சியினால் இக்குடிநீர் விநியோகம் முன்னர் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் குழாய்க் கிணறுகளில் நீரைப் பெற்று சீரான குடிநீர் விநியோகத்தை ஓரிரு நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (15)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

**நாடகமும் அரங்கியலும்**

தங்கவடிவேல் ஜெகன் (கோண்டாவில்),கனரட்ணம் அரியரட்ணம்(சுன்னாகம்),சண்முகலிங்கம் முகுந்தன் (இணுவில்), கிருஸ்ணபிள்ளை சுதாகரன் (ஏழாலை), கேசினி மணிராஜா (மானிப்பாய்),சிவலிங்கம் மரியா பத்மதர்சினி (அல்வாய்), சிவராஜா தர்மினி (சுன்னாகம்), பொன்னுத்துரை உதயரஜ்யினி (வரணி), மகேஸ்வரன் சுதாகரன் (சுன்னாகம்), துரைசிங்கம் ரஜீத்குமார்(சுன்னாகம்),கனகலிங்கம் தயாகோபி (மானிப்பாய்), வேகவனம் சுமன்ராஜ் (குருநகர்) ,மரியநாயகம் தனசீலி (சுண்டிக்குளி), நவரட்ணராஜன் நிலானி (துரை), அருமைநாயகம் றெஜி டெனியலா (சுன்னாகம்),ஏரம்பமூர்த்தி சுகந்தினி (நீர்வேலி), விஜயலக்சுமி கந்தசாமி (காரைநகர்), கியோகினி கிருஸ்ணன் (சுன்னாகம்), வேணுகா நவரட்ணலிங்கம்(சுன்னாகம்), அனுஸா தவக்குமார் (நல்லூர்),ஹெரிசா சசிகலா அன்ரன் யோகநாதன் (யாழ்ப்பாணம்),சிவராசா தர்சினி (தெல்லிப்பளை), இராஜரட்ணம் தர்மிலா (சுன்னாகம்),நிறஞ்சி சிவசுப்பிரமணியம்(ஆனைப்பந்தி), டான்சிகா யேசுறட்ணம் (மிருசுவில்), சிறிறஞ்சினி இராஜேந்திரன் (யாழ்ப்பாணம்), யேசுதாசன் சர்மிலலோகினி (குருநகர்), சிவகணேசன் செந்தூரன் (வவுனியா), இரத்தினம் மீரா (யோகபுரம்),தவபாலசிங்கம் சோபனா (வவுனியா), மேனகா பொன்னம்பலம் (புளியங்குளம்), விஸ்வலிங்கம் ராசகுமார் (குருக்கள் மடம்), சிவகுரு நந்தகுமார் (மட்டக்களப்பு, )ரட்ணம் சுகந்தினி (கரந்தன்)

**கணிதம்**

மகேந்திரன் இரமணன் (பரந்தன்), அருளானந்தம் ஜெயாநந் (முல்லைத்தீவு), அழகன் விஜிதா (ஒட்டிசுட்டான்), செல்வரட்ணம் செல்வரஜனி (உடையார்கட்டு), இராஜநாயகம் கேமா (முல்லைத்தீவு), கமலினி இராஜரட்ணம் (முல்லைத்தீவு), பாலகிருஸ்ணன் ருத்திரா (முல்லைத்தீவு), சுந்தரராஜன் காயத்திரி (யோகபுரம்), பாலசிங்கம் கமலராஜன் (முல்லைத்தீவு), மாயன் விஜிந்தன் (கிளிநொச்சி), இராஜநாயகம் இராஜதனுஜா (காரைதீவு - 1), தெய்வநாயகம் சுகிகரன் (காரைதீவு), சாமித்தம்பி ருக்மன்காதன் (மட்டக்களப்பு), சின்னையா திவாகரன் (மண்டூர்), முகமட் அனிற்றா சபிறினா (அக்கரைப்பற்று -1), இளையதம்பி பிறேமகுமாரி (வாழைச்சேனை), பாக்கியராஜா சுசிகலா (வாழைச்சேனை), குணகேஸ்வரன் மோகனரூபன் (வவுனியா), சரவாணந்தன் சங்கீபன் (வவுனியா), யோகதாசன் டக்கிளஸ் நிமலன் (வவுனியா), சோமசுந்தரம் சுதாகர் (வவுனியா), விஜயசிங்கம் விஜயரதி (மொறட்டுவ), யோகநாதன் கார்த்திகா (வவுனியா), நவரட்ணம் சுபதினி (வவுனியா), சியாமினா சிவராஜா (புளியங்குளம்),பரமசிவம் பிரபாகரன் (வவுனியா),தணிகாசலம் சுஜீபன் (வவுனியா),அல்பிரட் யோகராஜா தர்சினி (யாழ்ப்பாணம்), செல்வநாயகம் சிறீதரன் (யாழ்ப்பாணம்) பரராஜசிங்கம் நவநீதன் (பளை), பரமசோதி வாமதேவன் (பருத்தித்துறை), சந்திரசேகரம் சசிகரன் (பருத்தித்துறை), பாலச்சந்திரன்பிரசன்னா (யாழ்ப்பாணம்), தெய் வேந்திரம் சுகந்தன் (கரவெட்டி), அமிர்தலிங்கம் அச்சுதன் (வல்வெட்டித்துறை), ஜெயவரதராஜா புருசோத்மன் (கரவெட்டி), செல்வராஜா பிரகாஸ் (கொக்குவில்),சிதம்பரப்பிள்ளை விஜயகாந்தன் (மிருசுவில்), துரைசிங்கம் சுவேர்தன் (நீர்வேலி), துரைராஜா மதனமோகன் (யாழ்ப்பாணம்), தியாகராஜா செந்தூரன் (மாதகல்) சிவலிங்கம் சுதாகர் (நீர்வேலி), இராசபற்குணம் இராகுலன் (வல்வெட்டித்துறை), தனபாலசிங்கம் கபிலன் (மீசாலை) லசாறுஸ் பிறேமாகாந் (சுண்டிக்குளி), சிறீபதி சுஜானி (கோண்டாவில்), திருநாவுக்கரசு தர்சினி (திருநெல்வேலி) வல்லிபுரம் தர்சினி (காரைநகர்),கணேசன் காயத்திரி (மானிப்பாய்), நல்லதம்பி அருள்செல்வி (இளவாலை), சடாச்சரம் முகுந்தா (அச்சுவேலி), ஆனந்தசுந்தரம் வதன லட்சுமி (கொழும்புத்துறை),

*(நாளை தொடரும்)*

# அறிவுசார் துறையில்....

இன்று எமது தலைமுறையொன்று புலம் பெயர்ந்து சர்வதேச மெங்கும் அறிவும் பல்துறை ஆற்றலும் கொண்ட ஓர் தலைமுறையாக வளர்ந்து வருகின்றது. இவர்கள் அந்நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி அமைப்புக்களிலும் துறைசார் கற்கை நெறிகளைப் பயின்று வருகின்றனர். அத்துறைகளில் அந்நாட்டு மாணவர்களையும் விட முன்னணியிலும் நிற்கின்றனர். இந்நிலையில் தமக்கென்ற தனித்துவமான கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கும் தமிழீழ மாணவர்களும் சர்வதேச தமிழீழ மாணவர்களும் இணைந்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்ற அமைப்பாகத் தோற்றம் பெற்றிருப்பதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் உவகையும் உற்சாகமும் அடைகிறேன்.

இன்றைய தகவல் யுகத்தில் உலகில் எந்தவொரு மூலையில் இருக்கும் எந்தவொரு இனத்தைச் சேர்ந்த மாணவர்களும் தமது உயர்கல்வி வாய்ப்புக்களுக்கான வசதிகளைக் கொண்டிருக்கின்றனர். ஆனால் எமது தேசத்திலோ எமது மாணவர்கள் போரினாலும் திட்டமிட்ட புறக்கணிப்புக்களாலும் பல தலைமுறைகள் பின்தங்கிய நிலையிலேயே தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். இவ்வாறான சூழலில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமிழீழ மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கினை ஆற்றமுடியும். சர்வதேச பல்கலைக்கழகங்களில் பயிலும் எமது தமிழீழ மாணவர்கள் தாயகத்தில் தமது சக மாணவ சமூகத்துடன் தத்தமது துறைசார் கல்வியினை பகிர்ந்து கொள்வதோடு அவர்களின் முன்னேற்றத்திற்கும் பெரும் துணையாக இருக்க முடியும். இவ்வமைப்பு மூலம் பாடசாலை மட்டங்களில் இருந்து பல்கலைக்கழகம் வரை கல்வி தொடர்பாக எமது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வாய்ப்பாக இது அமைந்துள்ளது. அத்துடன் எமது சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை சர்வதேசத்தில் எமது மாணவர்கள் மத்தியில் பேணி வளர்ப்பதோடு தேசப்பற்றுக் கொண்ட ஓர் இளம் தலைமுறையையும் வளர்த்தெடுப்பதற்கான வாய்ப்பினையும் இது ஏற்படுத்துகிறது.

இன்றைய காலகட்டத்தில் எமது மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்தின் பலாபலன்களையும் நவீன அறிவியல் முன்னேற்றங்களையும் உள்வாங்கி முன்னேற்றமடைந்த அறிவியல் சமூகமாக பரிணமிப்பதற்கு தமிழீழ மாணவர்களும் சர்வதேச தமிழீழ மாணவர்களும் இணைந்த இவ்வாறான ஓர் சர்வதேச மாணவர் அமைப்பு மிகவும் அவசியமாகிறது. எமது சர்வதேச தமிழீழ மாணவர்களும் தமிழீழ மாணவர்களும் தேசப்பற்றும் தமிழ் தேசிய உணர்வும் கொண்டவர்களாக வளர்வதற்கான ஓர் இடைப் பாலமாகவும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைந்துள்ளது. அறிவியல், தகவல் தொழில் நுட்பம், மருத்துவம், பொறியியல், அரசியல், சர்வதேச உறவுகள் எனப் பல்துறை சார்ந்த நிபுணத்துவம் கொண்டவர்களாக எமது தமிழீழ தேசத்தின் தேச நிர்மாணிகளாக உலகளாவிய ரீதியில் எமது இளம் தலைமுறையை வளத்தெடுக்க வேண்டியது எமது தலையாய கடமை. ஆயிரக்கணக்கான போராளிகளினதும் மக்களினதும் அர்ப்பணிப்புக்களாலும் அளப்பரிய தியாகங்களாலும் கட்டியெழுப்பப்படும் எமது தேசத்தின் எதிர்காலத் தலைமுறை தேசப்பற்றும் அர்ப்பணிப் புணர்வும் நேர்மையும் தேச நலனில் அக்கறையும் கொண்ட ஓர் முற்போக்கான தலை முறையாக வளர வேண்டும்.

இவ்வாறானதோர் பின்புலத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தோற்றுவிக்கப்பட்டு அதன் தலைமையகம் யாழ். மண்ணில் திறந்து வைக்கப்படுவது இன்றைய எமது காலததின் தேவைக்கு இன்றியமையாததாகின்றது. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தோற்றத்திற்கு முன்னின்றுழைத்த தாயகத்திலுள்ள யாழ்ப்பாண, மட்டக்களப்பு மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களும் கல்விச் சமூகமும் சர்வதேச தமிழீழ மாணவர்களும் கல்விச்சமூகமும் பாராட்டுக்குரியவர்கள். இவ்வமைப்பு விழுதெறிந்து பெரும் விருட்சமாக சர்வதேசத்திலும் தாயகத்திலும் வாழும் எமது இளம் தலைமுறையை ஒன்றுபடுத்த பல்துறைகளிலும் நிபுணத்துவம் கொண்ட தேசப்பற்று மிக்க ஓர் இளம் தலைமுறையின் உருவாக்கத்திற்கு வழிசமைக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில பெரு மகிழ்ச்சியடைகிறேன் எனக குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய நாள் இனிய நாள்

**10.10.2002 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் :- | மனக்கவலை, தேவையற்ற பயம், கண்ணில் வலி, எதிரி தொல்லை, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம். |
| இடபம் :- | கௌரவம், பெண்கள் மகிழ்ச்சி, வாக்குவாதம், புத்திரர் கவலை, கல்வி முன்னேற்றம், |
| மிதுனம் :- | பணவரவு குறைவு, எடுத்த காரியம் தாமதம், கல்வி முன்னேற்றம், மாதா சுகயீனம், வைத்தியச் செலவு. |
| கர்க்கடகம் :- | வெற்றி, புகழ், பொதுச் சேவையில் மகிழ்ச்சி, தேகசுகம், கல்வியில் ஊக்கம் குறைவு |
| சிங்கம் :- | மாதா சுகயீனம், வைத்தியச் செலவு, வாகனச் செலவு, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம். |
| கன்னி :- | பணவரவு, மகிழ்ச்சி, தொழில்ஸ்தானத்தில் கவனம், வீண்பழி, கணவன் மனைவி மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| துலாம் :- | மனஸ்தாபம், வரவுக்கு மிஞ்சிய செலவு, எடுத்த காரியம் தடை, கண்ணில் வலி, தொழில்ஸ்தானத்தில் முன்னேற்றம், கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும். |
| விருச்சிகம் :- | வீட்டில் மகிழ்ச்சி, விருந்துபசாரம், பணவரவு, கலை நிகழ்ச்சி ரசனை, கல்வி முன்னேற்றம், |
| தனு :- | எடுத்த காரியம் தடை, பணவரவு, தேகசுகக் குறைவு, அயலில் மனஸ்தாபம், கல்வி முன்னேற்றம், |
| மகரம் :- | செய்தொழில் மேன்மை, பணவரவு, தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம், சாத்வீக சிந்தனை. |
| கும்பம் :- | எடுத்தகாரியம் வெற்றி, பொது சேவையில் மரியாதை, கௌரவம், தெய்வவழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| மீனம் :- | பிதாவுடன் நல்லுறவு, தேக சுகம் நன்று, மனக்கட்டுப்பாடு, தேவையற்ற பயணம், கல்வியில் ஊக்கம் வேண்டும். |

யாழ்.கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்

# எங்கே போகிறோம்...? -நேசன் -

## எமது கோயில்கள்! எமது வழிபாடு !!

கோயில்கள் நிறையவே இருக்கின்ற ஊரில் குடியிருக்கும் பாக்கியம் பெற்றவர்கள் நாங்கள். பூஜைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள் என்று எப்போதுமே கோயில்கள் கலகலப்பாய் மங்களமாய் அடியவர்களுக்கு நிறையவே திருப்தி தருகின்றனவாக விளங்குவதும் மகிழ்ச்சிதான். நம்பிக்கையோடு கோயிலை நாடிவந்து வழிபட்டுப் போவதில் எமது மக்கள் மிகவும் சந்தோஷமாய் இருப்பதனைக் காண ஆனந்தமாக இருக்கிறது. பெரும்பாலான முகங்களில் ஒரு ஆறுதல், திருப்தி, நீண்டகாலங்களுக்கு முன்னர் கண்ட நிறைவான வாழ்வின் பிரதியலிப்பை மீண்டும் காணக்கிடைத்த மாதிரி இருக்கிறது.

இந்த வழிபாடுகள், திருவிழாக்கள் எல்லாம் மக்களின் மனதுக்கு ஒரு சிகிச்சையாக, மனோ இயல்ரீதியாக நிறைவும் நிம்மதியும் தருகின்றவையாக அமைவதால் எமது கலாசாரத்தோடு இணைந்த அம்சங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன; மிகவும் சரி.

எமது பகுதிகளின் பல கோயில்களில் என்ன விசேஷமானாலும் அதிகாலைப் பொழுதிலிருந்து தெரியவந்துவிடும். ஊர் முழுவதற்கும் மட்டுமல்ல. அயலூருக்கும் கூட எப்படி என்கிறீர்களா? தெரியும் தானே .....ஒலிபெருக்கி இல்லாத ஆலயமே இல்லை என்கிற மாதிரி முழங்கித் தள்ளுகிற ஒலிபெருக்கிச் சத்தம் எத்தனை ஊர்களைக் கலக்கி அடிக்கிறது. இப்போதெல்லாம் அந்தந்தக் கோயில்களின் பரிபாலனத் துறையினரோடு பேசினால் இப்படிச் செய்வதுதான் கோயிலுக்குச் சிறப்பு, இந்த விதமாகப் பராமரிப்பதுதான் சரி என்கிறார்கள் அதுவும் சரி.

காதைக்கிழிக்கிற சத்தத்தில் பத்திப் பாட்டோ தேவாரமோ திருவாசகமோ ஒலி பரப்பினால் தான் கோயிலுக்குச் சிறப்பு என்று கருதுகிற அவர்கள் அந்தக் கோயில்களைச் சூழ இருக்கிற மக்களை, நோயாளிகளை, இருதய நோய்வாய்ப்பட்டவர்களை, படிக்கும் மாணவர்களை, ஆஸ்பத்திரிகளை, பாடசாலைகளை, கல்வி நிலையங்களை நினைத்துப் பார்ப்பதில்லையா?

சூழல் மாசுறுதல் என்பதில் அதிக சத்தத்தினால் ஏற்படும் மாசுறுதல் குறித்துச் சிறிதும் அக்கறை இல்லையா இவர்களுக்கு? அமைதி குலைவதும் மனிதர்களுக்கும் சூழ இருக்கிற உயிரினங்களுக்கும் பாதகமான விளைவை ஏற்படுத்துகிற ஒரு விடயம் என்பதை இவர்கள் அறிய மாட்டார்களா?

பெரும்பாலும் கோயில்களின் பரிபாலனப் பொறுப்பில் இருக்கிறவர்கள் சமூகத்தில் உயர்நிலையில் இருக்கிற பொறுப்பான மனிதர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் இத்தகைய பாதிப்புகள் குறித்துப் பிரக்ஞையற்று உள்ளார்களா? அல்லது எமக்கென்ன போச்சு? என்கிற அலட்சியமா இல்லா விட்டால் சூழல் மாசடைவது என்பதை விட கோயிலில் திருவிழாவோ, அபிஷேகமோ, வேறெந்த விசேஷமோ சிறப்பாக நடந்தது என்று ஊரே பாரட்டுவது தான் பெரிது என்று கரு[illegible]கின்றார்களா?

கோயில் ஒலிபெருக்கிகள் அதிகாலை தொடங்கி நள்ளிரவு தாண்டியும் முழங்கித்தள்ளிக் கொண்டிருப்பதில் என்ன சிறப்பை இவர்கள் காணுகிறார்கள் .....? துரதிர்ஷ்ட வசமாக இரண்டாகவோ அல்லது இரண்டுக்கு அதிக மாகவோ பிளவுபட்டுப் போன ஊரவர்கள் பார்த்தாயா என்பலத்தை .....? என்று ஆளுக்காள் காட்டிப் பலப்பரீட்சை மற்றும் அதிபல நிரூபணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இப்படியாய்த் தங்களுக்குள் முரண்பட்டு மோதிக் கொண்டு, பின்பு ஆன்மீகம், கடவுள் ஈடேற்றம் என்று வேறு பேசிக் கொள்கிறார்கள். தங்களிடமே உருவாகிப் போன பகையுணர்வை மற்றும் மமதைகளிலிருந்து கூட விடுதலை பெற முடியாதவர்களாயிருந்து கொண்டு இவர்கள் வீடுபேறு பற்றிப் பேசுவது வேடிக்கைதான்.

திருவிழாக்காலமென்றால், விசேட விரதங்களென்றால் ஒலிபெருக்கிச் சத்தம் கேட்டே தீரும். பக்திப்பாடல்கள், பக்திப்படக்கதை வசனங்கள் என்று ஏதாவது நாங்கள் சகித்தே (ரசித்தே) தீரவேண்டும் ஒரு காலத்தில் ரீ.எம். சௌந்தர்ராஜனின் உள்ளம் உருகுதையா, கற்பக வல்லி..... சீர்காழியின் விநாயகனே, சின்னஞ் சிறுபெண்போலே...... இத்தகைய பாடல்கள் மனைசத் தொடும் வகையில் அமைந்திருந்தன கேட்டதுண்டு, ரசித்ததுமுண்டு.

இப்போது வெளிவந்து கொண்டிருக்கிற நவீன புராணப்(?) படங்களின் பாடல்களையும் ஒரே கூச்சலும் குளறலுமாய் கேட்கிற பாடலையும் உச்சத்தொனியில் கேட்டே தீரும் கட்டாயம் நேரும் போது மிகமிகச் சங்கடமாயிருக்கிறது பக்தி எப்படி வருமென்று புரியவில்லை இவற்றுக்கு மத்தியில் ஒரு திருவாசகமோ, தேவாரமோ கேட்கிற போது கொஞ்சம் ஆறுதலாயிருப்பதையும் குறிப்பிடவேண்டும் ஆனாலும் மனிதனுடைய உள்ளுணர்வுடன் தொடர்புள்ள பக்தி போன்ற விசயங்களை கூச்சலும் மாளத்துடன் கலந்து விடுவது சரியாகுமா காளியம்மா, நீலியம்மா என்று கூச்சலிட்டுக் கொண்டு அதைப் பாட்டென்று ஒலிபெருக்கியில் வேறு வழங்கினால் சூழல் என்னாகும். ஒரு எல்லைக்கு மேல் சத்தமிடுவது மனிதமனதுக்கு எவ்வளவு பாதகமானது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது கவனம் கொள்வார்களா?

தனிமனிதனின் அல்லது குழு ஒன்றின் திருவிழா நடாத்தும் பலம் இவ்வளவு என்பதை நிரூபிக்கின்ற அளவு கோலாக ஒலி பெருக்கி முழக்கத்தையும் கோஷ்டிகளின் கான மழையையும் கைக்கொள்ளுகிற சிறு பிள்ளைத் தனம் இன்னும் எவ்வளவு காலம் எம்மிடம் இருக்கப் போகிறது ?

உலகம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கையில் நாம் மாத்திரம் இன்றும் அந்தப்பழைய மனிதராய் வாழமுனைவது சரிதானா?

கடவுள், கோயில், ஆன்மீகம் போன்ற விஷயங்களை இனியாவது ஒரு அமைதியான அணுகுமுறையில் நாம் கையாள முடியாதா? வழிபாடும் வணக்கமும் ஆர்ப்பாட்டம் இல்லாமல், ஆடம்பரமில்லாமல் அமைதியாக எளிமையாக நிகழ முடியாதா? விலாசம் காட்டும் போக்கை விடுத்து, ஆழமான நல்ல சமயிகளாக நாம் உருவாக முடியாதா?

இந்த வழியிலான எமது வழிபாட்டு முறையோடு நாம் எங்கேதான் போகிறோம்

மீண்டும் சந்திப்போம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலையில் கைதான புலிகள் - படையினர் விடுவிப்பு!

(திருகோணமலை)

படையினரால் முள்ளிப் பொத்தானையில் வைத்து கைதான இரு புலிப்போராளிகளும், புலிகளால் வில்கம் விகாரைக் காட்டில் வைத்து கைதான 6 படையினரும் நேற்று விடுவிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து படையினரை விடுதலை செய்யக் கோரி திருகோணமலை நகரில் சிங்கள மக்கள் மேற்கொண்ட போராட்டமும் கைவிடப்பட்டது.

முள்ளிப் பொத்தானையில் படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு விடுதலைப் புலிகளையும் நேற்று திருமலை நீதிமன்ற நீதவான் தியாகேந்திரன் பிணையில் செல்ல அனுமதித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செயயப்பட்டதையடுத்து இவ்விரு புலிகள் உறுப்பினர்களையும் விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம் இவ்வுத்தரவின் பிரதி நீதிமன்ற நீதவானுக்கு கிடைத்ததையடுத்து இவர்களைப் பிணையில் செல்ல அவர் அனுமதியளித்தார்.

இதைத்தொடர்ந்து நேற்று மாலை 5.30 மணியளவில் இறக்கக்கண்டியில் வைத்து ஆறு படையினரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் வைத்து புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திலக்கினால் விடுவிக்கப்பட்டனர்.

### சர்வதேச...

வைக் கொடியை மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வன் கஜேந்திரன் ஏற்றி வைத்தார்.

பின்னர் யாழ். கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழுத் தலைவர் அருட்திரு. பேணாட் அடிகள், யாழ். மாவட்ட வெகுஜன ஒன்றியத் தலைவர் பரமநாதன், தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றினார்கள். (லி,உ)

### களுத்துறை...

அமைச்சர் மிலிந்த மொறகொட கைதிகளுடன் கலந்துரையாடினார். இவருடன் அமைச்சர்களான மகேஸ்வரன், ஜெயலத் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் அனைத்துப் எம்.பிக்களும் சென்றிருந்தனர்.

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு ஏ 9 வீதி திறந்திருக்கும் நேரம் நீடிப்பு

## கோட்ட ரீதியாக இலவச பஸ் சேவைகள்

(வவுனியா நிருபர்)

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளூடான போக்குவரத்து நேரத்தை நீடிப்பதற்காக வவுனியாவில் அதிகாரிகளுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுக்கள் இடம் பெற்றன.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வவுனியா ரம்மியா ஹவுஸில் நடந்த இந்தச் சந்திப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், பிரச்சாரப் பிரிவுப் பொறுப்பாளர் கதிரவன், ஆகியோரும் கூட்டமைப்புப் பிரதிநிதி மூர்த்தியும் பங்குபற்றியிருந்தனர்.

புலிகள் தரப்பில் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக சோதனைச் சாவடிகளை இன்று மாலை 6.30 மணிவரை திறந்திருக்கவும், நாளைக் காலை 5.30 மணிக்கு மீளத்திறந்து விடவும் படைத்தரப்பு இணங்கியுள்ளது.

இதேவேளை - கிளிநொச்சி எழுச்சி நிகழ்வுகளுக்கு செல்லும் மக்களின் வசதி கருதி கோட்ட ரீதியாக இலவச பஸ் சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும்,

கோப்பாயில் 2ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்த இடத்திலுள்ள நினைவுத் தூபி புனரமைக்கப்பட்டு இன்று காலை 8 மணிக்கு அங்கு நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவிருப்பதாகவும் அரசியல் துறை அறிவித்துள்ளது.

# எஸ்.ரி.எவ் கண்மூடித்தனமாக...

தாங்கள் தாக்குவதாகவும் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் காட்டும்படியும் தமது முகாமுக்கு முன்பாக வாகனத்தை நிறுத்திச் செல்லும்படியும் தெரிவித்த அதிரடிப் படையினர் தொடர்ந்தும் மூவரையும் மண்வெட்டிப் பிடியினால் தாக்கினர். இத்தாக்குதலை வெற்றுக் கைகளால் தற்பாதுகாப்புக்காக தடுத்துச் சமாளித்த விடுதலைப் புலிகள் சாதுரியமாக அவ்விடத்தைவிட்டு வாகனத்துடன் அகன்று சென்றனர்.

எனினும் தாக்கிய பின்பும் தகாத வார்த்தைகளால் புலிகளை அதிரடிப் படையினர் திட்டினர். இவற்றை அருகில் நின்ற பொது மக்கள் அவதானித்துள்ளனர். அப்பால் சற்றுச் சென்ற புலிகளாலும் அப்பொதுமகனாலும் தொடர்ந்து வாகனத்தில் பயணித்து நகரமுடியாத அளவுக்குத் தாக்குதலால் கால்கள், முதுகு என்பன வீக்கமடைந்திருந்ததால், பொதுமக்கள் அவர்களை திருக்கோயில் மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

திருக்கோயில் மருத்துவமனையில் இரண்டு போராளிகளுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், இவ்விடயம் தொடர்பாகத் தகவல் பெற்றுக்கொண்ட இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அங்கு வந்து போராளிகளிடம் நடந்த சம்பவம் தொடர்பாக விபரம் கேட்டுப் பெற்றுக் கொண்டனர்.

## கொதித்தெழுந்த மக்கள்

விடுதலைப் புலிகள் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் செய்தி பரவியதும் தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள், கடைகள், அலுவலகங்கள் எல்லாம் மூடப்பட்டன. பதற்ற நிலை உருவாகத் தொடங்கியது

அதேவேளை கொதிப்படைந்த மக்கள் வீதிகளுக்குக் குறுக்காக ரயர்களைப் போட்டுக் கொழுத்தினர். வீதிக்குக் குறுக்காக மரங்களைப் போட்டுத் தடுத்தனர். பொலிஸாரின் போக்குவரத்துககளும் தடைப்பட்டன.

இதனையடுத்து புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைத் தொடர்பு கொண்ட கல்முனைப் பொலிஸ் அதிகாரி, கல்முனைப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் காண்டீபனுடன் சென்று பொது மக்களைச் சந்தித்து கலந்துரையாடி நிலைமையைச் சுமுகமாக்க முயற்சித்தார். பொலிஸ் அதிகாரியும் அரசியல்துறைப் பொறுப்பாளரும் பொது மக்களுடன் நீண்டநேரம் உரையாடினர் என்றும் எனினும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தலையிட வேண்டாம் என்ற கடுமையான நிலைப்பாட்டில் பொதுமக்கள் இருந்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

## மக்கள் நடத்திய கண்டன ஊர்வலம்

அதேவேளை, காஞ்சிரங்குடா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் புலிகள் மீதான தாக்குதல் பற்றி அறிந்த போது இதனைக் கண்டித்து கண்டன ஊர்வலம் ஒன்றை அதிரடிப்படை முகாம்வரை நடத்துவதற்கு தீர்மானித்தனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மக்கள் ஊர்வலமாக முகாமுக்கு அருகில் சென்று கொண்டிருந்த போது அதிரடிப்படையினர் ஊர்வலத்தில் சென்ற மக்களுடன் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை தோன்றியது.

இக்கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு மக்களில் சிலர் அதிரடிப்படையினரின் முகாம் அறிவித்தல் பலகை, மின்குமிழ்கள் ஆகியவற்றை அடித்து நொருக்கியதுடன் முகாமுக்குள் உள் நுழையவும் முற்பட்டனர் எனத் தெரியவருகிறது.

## ஊர்வலம் மீது கண்மூடித்தனமாக சூடு

இந்நிலையில் காஞ்சிரங்குடாவிலிருந்து பதினைந்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தாண்டியடி அதிரடிப்படை முகாமிலிருந்து கவசவாகனங்களில் மேலதிக படையினர் வந்து சேர்ந்ததும் பொது மக்கள் மீதான தாக்குதல் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் மக்களுக்கு காலுக்குக் கீழாகவே துப்பாக்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் உடனே மக்கள் மிரண்டு ஓடுவதைக் கண்ட சில அதிரடிப்படையினர் மக்களைக் கலைத்துக் கலைத்துச் சுட்டுத்தள்ளியதாகவும் சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

## ஐவர் ஸ்தலத்தில் பலி

இச்சம்பவத்தில் உடனடியாக ஐந்துபேர் வீழ்ந்து மாண்டனர். இவர்களின் இறந்த உடல்கள் அதிரடிப்படையினருக்கு அண்மித்துக் காணப்பட்டதனால் கடுங்காயத்துக்குள்ளான மக்களை தூக்கிக் கொண்டு ஏனைய மக்கள் தப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் காயமடைந்தவர்களில் மேலும் இருவர் இறந்துள்ளனர். இவர்களின் உடல்கள் திருக்கோயில் மாவட்ட வைத்தியசாலையில் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டன.

## நெருக்கடி நிலையில் ஆஸ்பத்திரி

இத்தாக்குதலில் கடும்காயத்துக்கு உள்ளானவர்களும் சிறுகாயங்களுக்கு உள்ளானவர்களும் திருக்கோயில் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். எனினும் அங்கு வைத்திய வசதிகள் போதியளவு இல்லாததால், குருதிப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்குரிய சில முதலுதவிகளை மட்டும் அங்குள்ள மருத்துவர் மற்றும் தாதியரால் மேற்கொள்ள முடிந்தது.

இத்தாக்குதல் சம்பவங்களையடுத்து அம்பாறையின் தமிழ்ப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து ஸ்தம்பித்திருந்ததால், காயப்பட்டவர்கள் மிகவும் பிந்திய நிலையிலேயே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்று கல்முனை ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டன. காயப்பட்டவர்களில் இருவரின் நிலைமை நேற்று நள்ளிரவு வரை நம்பிக்கையளிப்பதாகவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டது.

## மக்களின் உடல்கள் மீட்கப்படவில்லை

கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் சில உடல்கள் அதிரடிப் படைமுகாமுக்கு அருகில் இரவு வரை மீட்கப்படாமல் காணப்பட்டதாகத் தெரியவந்தது. இவற்றை மீட்கும் பணியில் உதவப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முயற்சித்த போதும் இன்று காலை விடியும் வரை காத்திருக்கும்படி அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளதாகவும் அறியவருகிறது.

## காயமடைந்த சிறுவன் மரணம்

பலமாக காயமடைந்த சுமார் பதினைந்து பேர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனுமதிக்கப் பட்டவர்களில் பதினைந்து வயது சிறுவன் ஒருவர் மரணமடைந்து விட்டார். மேற்படி வைத்தியசாலையில் இரத்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவசரஅவசரமாக மட்டக்களப்பில் இருந்தும் கல்முனை தெற்கு மருத்துவமனையில் இருந்தும் இரத்தம் பெறுவதற்கு நேற்று நள்ளிரவுவரை முயற்சி செய்யப்பட்டது.

## கண்காணிப்பு குழு செல்ல தடுப்பு

காஞ்சிரங்குடா சம்பவத்தை நேரில் பார்க்கச் சென்ற போர் நிறுத்க் கண்காணிப்புக் குழுவினர் படையினரால் நேற்றிரவு தடுத்து நிறுத்தப்பட்டனர்.

சம்பவ இடத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பால் திருக்கோவில் பகுதியில் இவர்கள் தங்கியிருந்தனர். இதே போன்று சர்வதேச செஞ்சிலுவையினரும் திருக்கோயில் பகுதியிலேயே நேற்று நள்ளிரவு வரை தங்கிநின்றனர். சம்பவ இடத்துக்குச் செல்ல இவர்கள் எடுத்த முயற்சிகள் எதுவும் நள்ளிரவு வரை பலனளிக்கவில்லை.

## பொலிஸ் - புலிகள் ஒழுங்கு நடவடிக்கையில்

விசேட அதிரடிப்படையின் தாக்குதலில் காயமடைந்த பொதுமக்கள் அனுமதிக் கப்பட்டுள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் விடுதலைப்புலிகளும் பொலிஸாரும் இணைந்து ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது என்று எமது செய்தியாளர் மருத்துவமனையிலிருந்து தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணர் மட்டுமே இருப்பதனால் காயப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் சத்திரசிகிச்சை செய்வதில் தாமதம் நிலவியதாகத் தெரியவருகிறது. இவ்விடயமும் பொதுமக்களின் அமைதியின்மைக்கு மறுகாரணமாகவிருந்தது.

## விசாரணைக்குப் பிரதமர் உத்தரவு

நேற்றிரவு நடைபெற்ற அனர்த்தம் பற்றிய முழுமையான விசாரணைக்கு பிரதமர் ரணில் உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகளை சம்பவம் நடை பெற்ற இடத்திற்கு நேற்றிரவே உடனடியாகச் செல்லுமாறு அவரது உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

### யாழ். பஸ்...

தையும் பறித்துச் சென்றதாகக் கூறப்பட்டது.

பின் தனியார் பஸ் சாரதிகள் என எண்ணி ஓட்டோ சாரதிகளைப் போக்குவரத்துச் சபையினர் தாக்கினர். இதனால் ஆத்திரமுற்ற ஓட்டோ சாரதிகள் இரும்புக் கம்பிகளினாலும், கற்களினாலும் பஸ் நிலைய பொறியியல் பகுதியைத் தாக்கியதுடன் அங்கிருந்த பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து போக்குவரத் துச் சபை ஊழியர்கள் ஒரு மணிநேர பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். எனினும், இன்று இப்பகிஷ்கரிப்பு கைவிடப்படும் என போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

(78,46,111,59,83)

### கைதிகளை...

குறுக்காக மக்கள்கூடி நின்று இவ்வாறு மறியல் போராட்டம் செய்தனர்.

இதேவேளை யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்னாலும் மாபெரும் மறியல் போராட்டம் நடாத்தப்பட்டது. கைதிகளின் பெற்றோர் மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து மேற்படி அலுவலகம் முன்பாக சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அமர்ந்திருந்து போராட்டம் செய்தனர். மழையையும் பொருட்படுத்தாமல் மாலை 2 மணிவரை நடைபெற்ற இப்போராட்டத்தின் இறுதியில் எதிர்ப்புக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. மகஜரும் கையளிக்கப்பட்டது.

(க,லி,25,51,82,59,111)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 2-ம் லெப். மாலதியின் 15 ஆவது நினைவு நாளும்

## தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும்



## ஒக்ரோபர் 10

சூரியப் புதல்விகளாய் எதிரியைச் சுட்டெரித்தவர்கள்
போர்க்களத்தில் எதிரியை புறமுதுகிட வைத்தவர்கள்
உங்கள் வாழ்விற்காய் தங்களைக் கொடுத்தவர்கள்
உங்கள் வரவிற்காய் காத்திருக்கின்றனர்.

*பார்ப்போரைக் கவர்ந்திருக்கும்! கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்!*
*நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள்.....*
*இன்று சமாதானத்திற்கு வழி அமைத்தவர்கள்....*
*இந்த அக்கினிக் குஞ்சுகள்.*

இடம்:- கிளிநொச்சி (மத்திய விளையாட்டுத் திடல்)
நேரம்:- மாலை 3.00 மணி

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

'அனைத்துத் தமிழீழ மக்களையும் அழைக்கின்றோம்...'

அரசியல்துறை,
யாழ்.மாவட்டம்.